

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்

# தீபம்

21.06.2020 தீபம் – 230
இணையப் பதிப்பு





## சீனா – இந்திய எல்லைப் பிரச்சினை வல்லரசுப் போட்டிக்கான ஒத்திகையா?



HAPPY FATHERS DAY!

International Day of Yoga
21 June
Yoga for Harmony & Peace

# தேர்தலுக்காகப் புலிக்கவசம் போடும் சம்பந்தன்

## ஒன்றுக்கு முன்னால் பூச்சியம் வந்தால்?
கருணா படலம்



## "கருணா அம்மான்"
சிங்கள மக்களின் மீட்பரா? துரோகியா?



## நாடாளுமன்றத் தேர்தலும் தமிழினமும்

# தேர்தல் காலமும் தேரோபதேசமும்
- குருபார்வை -

கட்சி அரசியலுக்கப்பால் மக்கள் அரசியலைப் பேசும் தமிழருக்கான ஒரே வார இதழ்



## கொரோனாச் சிந்தனைகள் 07

# இலவசக் கல்வியைச் சோதனைக்குள்ளாக்கிய வைரஸ்

யாழ் நகரப்பகுதியில் “ பிஸி பார்க்; என்ற பெயரில் ஒரு கணினி நிறுவனத்தை வைத்திருக்கும் சசீந்திரன் கமலநாதன் முகநூலில் பின்வருமாறு எழுதி இருக்கிறார் “சிறிது நாட்களுக்கு முன்னர் எனது வியாபார நிறுவனத்தில் கணனி ஒன்றை கொள்வனவு செய்வதற்காக ஒரு குடும்பம் வந்தது. கணினி ஒன்றை தயார் செய்யும்படி அவர்களது தேவையை கூறிய பின்னர் வங்கியில் சென்று பணம் எடுத்து வருகின்றோம் என்று கூறினார்கள். கணனியை தயார் செய்து வைத்திருந்த பொழுது பின்னர் வந்து கலங்கிய முகத்துடன் பிறகு வருகின்றேன் என்று கூறினார்கள். இங்கே வாருங்கள் அம்மா உட்காருங்கள் என்ன பிரச்சினை என்று வினவினேன். சிறிது சிறிதாக பேசத்தொடங்கினார். நகைகளை அடகு வைத்த வங்கிப் பற்று சீட்டுகளை என்னிடம் காட்டினார். இவ்வளவுதான் என்னால் திரட்ட முடிந்தது மிகுதி பணம் 12000 கிடைத்த பின்பு தான் நான் கணினியை வாங்கலாம் என்று கூறினார். பிள்ளையினுடைய தற்போதைய கல்வி தேவைக்காகத்தான் அவர் கணினி வாங்குகிறார். நான் கூறினேன் நீங்கள் இப்பொழுது கணனியை கொண்டு செல்லுங்கள். பிறகு பணம் கிடைத்த பிறகு கொண்டுவந்து தாருங்கள் என்று. இன்று காலை கொண்டு வந்து மிகுதிப் பணத்தை தந்தார். தந்து விட்டு எந்தவித பொறுப்பும் இல்லாமல் எப்படி இவ்வளவு பணம் கடன் தந்தீர் என்று கேட்டார். பணம் சம்பாதிப்பதிலும் பார்க்க ஆட்களை சம்பாதிப்பது மேல் என்று கருதுவதால் என்று கூறினேன் ..”

அதாவது இலத்திரனியல் கற்பித்தல் கற்றல் என்பது மாணவர்களுக்கிடையில் அசமத்துவங்களைப் பெரிதாக்கி இருக்கிறது. கல்வியை தனது முதலீடாகக் கருதும் ஒரு சமூகம் வைரஸ் தொற்றுக் காலத்தில் விடுபட்டிருக்கும் கல்வியை எப்படியாவது தொடர்ந்து விட வேண்டும் என்ற வெறியோடு இலத்திரனியல் கல்விக்குத் தேவையான உபகரணங்களைப் பெரும் விலை கொடுத்து வாங்கி வருகிறது. சாதாரண தொடு திரைக் கைபேசிகளில் தொடங்கி மடிக்கணினிகள், மேசைக் கணினிகள், ஹெட்போன் என்று பலவிதமான இலத்திரனியல் உபகரணங்களை ஆசிரியர்களும் மாணவர்களும் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். வைரஸ் தொற்றுக் காரணமாகக் கொழும்பிலிருந்து இலத்திரனியல் பொருட்களின் வரத்து தடுக்கப்பட்ட ஒரு பின்னணியில் கைபேசி களுக்கும் கணினிகளுக்குமான கேள்வி அதிகரித்திருப்பதால் அவற்றின் விலையும் சில ஆயிரங்களால் அதிகரித்து வருகிறது. ஏழைப் பெற்றோரும் ஆசிரியர்களும் விலை கூடியிருக்கும் இலத்திரனியல் கருவிகளை வாங்கச் சிரமப்படுகிறார்கள்.

வீட்டுக்கு வந்த பள்ளிக்கூடம் எனப்படுவது ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டது. கைபேசியில் பாடத்தைப் படிக்கும் ஒரு பிள்ளை சூம் வகுப்பாக இருந்தாலும் மைக்ரோ சொஃப்ட் டீம்ஸ் வகுப்பாக இருந்தாலும் அது சிறிய கைபேசித் திரையில் தான் பார்க்கும். அச்சிறிய திரையானது விரைவில் அதன் கண்களை களைக்கச் செய்து விடும். கைபேசியில் வகுப்பை பார்த்தபடியே உறங்கிய பிள்ளைகள் அதிகம் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் வகுப்பைத் தொடர்ந்தும் பின்பற்றுகிறார்களா? அல்லது வேறு எதையாவது செய்கிறார்களா? என்பதனை ஆசிரியர்கள் உறுதிப்படுத்த வேண்டிய ஒரு நிலைமை. முகம் பார்த்து நடக்கும் வகுப்புகளில் உயிர்த் தொடர்பு இருக்கும். ஆனால் முகம் பார்க்காத வகுப்பில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது பிள்ளை வகுப்பில் இருக்கிறதா இல்லையா என்பதனை உறுதிப்படுத்துவது கடினம். அவ்வாறு உறுதிப்படுத்துவதற்காக எல்லாருடைய முகங்களையும் பார்த்துக் கதைக்கும் ஒரு ஏற்பாட்டுக்குப் போனால் அது டேட்டாவைத் தின்றுவிடும். சில வகுப்புக்கள் முடியும் போது சிலவேளைகளில் ஒரு ஜிபி டேட்டா முடிந்து விடுகிறது என்று ஒரு பெற்றோர் சொன்னார். ஒவ்வொரு நாளும் 99 ரூபாய் டேட்டா தேவைப்படுகிறது என்று மற்றொரு பெற்றோர் சொன்னார்.

இவ்வளவு நேரமும் நாம் பார்த்தது கைபேசிகளை உபயோகிக்கும் பிள்ளைகளைப் பற்றி. கைபேசித் திரைக் கற்றல் கற்பித்தலுக்கான ஒரு திரை அல்ல. அது மிகமிகக் குறுந்திரை. அதிலும் கூட ஏற்றத்தாழ்வுகள் உண்டு. சில பிள்ளைகள் விலை கூடிய கைபேசியை பயன்படுத்தும். சில பிள்ளைகள் விலை குறைந்த கைபேசிகளைப் பயன்படுத்தும்.



கைபேசி தவிர கணினி ரப் போன்றவற்றை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு பிள்ளையும் அதனதன் வசதிக்கும், வளத்துக்கும் ஏற்ப அவற்றை வாங்கும். பயன்படுத்தும். டேட்டா விவகாரத்திலும் அப்படித்தான். சில பிள்ளைகள் அன்றாடம் சிறிய டேட்டா பாக்கேஜ்ஜை உபயோகிக்கும். வசதி உள்ள பிள்ளைகள் பெரிய பக்கேஜ் டேட்டாவை அல்லது ரவுட்டரை உபயோகிக்கும். எந்தப் பக்கேஜ்ஜை பயன்படுத்துவது எந்த இலத்திரனியல் உபகரணங்களைப் பயன்படுத்துவது என்பதனை அந்த பிள்ளையின் அல்லது அந்த ஆசிரியரின் வசதி வாய்ப்புகளே தீர்மானிக்கின்றன. இதுவிடயத்தில் பள்ளிக்கூடங்களோ அல்லது கல்வித்திணைக்களமோ அல்லது ஏனைய அரச நிறுவனங்களோ மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உதவுவதாகத் தெரியவில்லை. குறிப்பாக கல்வித்திணைக்களம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஒருங்கிணைப்பதாகத் தெரியவில்லை. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் டேட்டா விடயத்தில் சலுகைகள் வழங்கப்படும் என்று சில தொலைத்தொடர்பு நிறுவனங்கள் அறிவித்து இருக்கின்றன. ஆனால் பெரும்பாலானவர்கள் அந்த உதவியை பெறுவதில்லை என்று கூறப்படுகிறது. இது தொடர்பில் பாடசாலைக்கு பாடசாலை நிலைமை வேறுபடுகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள சில முன்னணிப் பாடசாலைகள் லொக் டவுன் காலத்திலேயே வைபர் குழுக்களை உருவாக்கிப் பின்னர் அக் குழுக்களை மைக்ரோ சொப்ட் ரீமுக்கூடாக இலத்திரனியல் வகுப்புக்களாக மாற்றி விட்டன. உதாரணம் “சுண்டிக்குளி மகளிர் கல்லூரி”. ஆனால் வசதி குறைந்த பாடசாலைகள் இப்பொழுதும் பாடங்களைக் கைபேசியில் படமெடுத்து அனுப்பும் ஒரு நிலைமை தான் காணப்படுகிறது. இந்த ஏற்றத்தாழ்வு இலவசக் கல்வி ஏற்பாட்டுக்கு எதிரானது. இலவச கல்வி என்பது மாணவர்கள் எல்லாரையும் சமமாகப் பார்ப்பது சமமாக நடத்துவது. பாடசாலை சீருடை என்பது ஏற்றத்தாழ்வுகளை இல்லாமல் செய்வதற்கான ஏற்பாடு. இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகம் என்றெல்லாம் தொடங்கிவிட்டு இப்பொழுது இலத்திரனியல் கல்வியானது அந்தச் சமத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கி விட்டதா ? கோவிட் - 19 இலவசக் கல்வியை சோதனைக்குள்ளாக்கி விட்டதா?

**சிந்தனைகள் தொடர்ந்து வரும்...**

பதிவு இலக்கம் : 105267
வார இதழ்
தீபம்
21.06.2020 தீபம் – 230
இணையப் பதிப்பு

# “கருணா அம்மான்” சிங்கள மக்களின் மீட்பரா? துரோகியா?

கருணா, ஒரு முன்னாள் விடுதலைப் போராளி. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒரு சாதாரண போராளியாக இணைந்து விடுதலைப் போராட்ட வாழ்வைத் தொடங்கியவர். படிப்படியாக வளர்ந்து அந்த இயக்கத்தின் உச்சியைத் தொட்டவர் மட்டுமல்லாது தலைவர் பிரபாகரனின் உள்ளத்தையும் தொட்டவர் என்ற பெருமைக்குரியவர். விடுதலைப்புலிகள் அடைந்த மாபெரும் வெற்றிகளின் பங்காளியாகவும் பேசப்பட்டவர். சமாதானப் பேச்சுவார்த்தைகளிலும் பங்கு கொண்டவர்.

அப்படிப்பேசப்பட்ட கருணா விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து பிரிக்கப்பட்டு அரசுடன் சேர்க்கப்பட்டார். அப்போது அரசின் அதி உன்னத விருந்தாளியாகக் கருதப்பட்டதோடு, அவருக்கு சுதந்திரக் கட்சியில் உறுப்பினர் அந்தஸ்தும், தேசியப்பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் வழங்கப்பட்டுக் கூடவே துணை அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டது.

இன்று இலங்கை அரசியலில் முக்கிய பேசு பொருளாக இருக்கின்ற கருணா. தான் கடந்து வந்த பாதையைச் சற்றுத் திரும்பிப் பார்ப்பாரேயானால். அவர் தன்னை எண்ணிப் பெருமைபடக் கூடிய காலகட்டம் அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராகக் கழித்த அந்த நாட்கள்தான் என்று சொல்வதை அவர் மறுத்துரைக்கார் என்பது அனைவரும் அறிந்ததே.

இலங்கை அரசியலின் முக்கிய காலகட்டத்தில், ராஜபக்ஷ குடும்பம் பல நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற இந்த இக்கட்டான தருணத்தில் கருணாவின் பேச்சானது எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறதென்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அது தொடர்பாக ஊடகத்தில் வந்த பல முக்கிய செய்திகளும், அதன் தலைப்புகளும் இதோ உங்களுக்காக..!

கருணாவின் அறிவிப்புக்குக் கோத்தாவின் பதில் என்ன? உடன் அறிவிக்குமாறு ஜே.வி.பி வலியுறுத்து. விரைந்து போரை முடிக்க காட்டித் தந்தவர் கருணாவே. ஆதரவுக் கரம் நீட்டுகிறார் அட்மிரல் சரத் வீரசேகர. கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டுள்ளமை ஒன்றும் பாரதூரமான விடயம் அல்ல. தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான இரகசியத் தகவல்களை இவர் வழங்கியதன் காரணமாகவே போரை விரைவாக முடிவுக்குக் கொண்டு வர முடிந்தது என்று அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

3000 இராணுவம் கொலை. கருணாவின் ஒப்புதல் வாக்குமூலமாகக் கருதி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் - கோத்தா அரசை வலியுத்துகிறது தமிழ் தேசிய மக்கள் முன்னணி. கருணாவின் கருத்துத் தொடர்பில் தேசப்பற்றாளர்களின் நிலைப்பாடு என்ன? கேள்வி எழுப்புகிறது ஜாதிக ஹெல உறுமய. கருணாவின் கருத்து மிகப் பாரதூரமானது. ஆராய ஆணைக்குழு தேவை. நவீன் திஸ்ஸநாயக்க வலியுறுத்து.!

கருணாவை உடனே கைது செய் - கோருகிறது சிங்கள ராவய.


கருணாவைக் கைவிட்டார் மஹிந்தா - இணையச் செய்தி

மஹிந்தா கட்சியிலிருந்து கருணா வெளியேற்றம். - இணையம்.

கருணா புலி வீரனாக நாடாளுமன்றத்துக்கு வர முயற்சித்து வருகிறார். - சம்பிக்க ரணவாக்க. - இணையம்.

3000 படையினரைக் கொலை செய்த கருணா ஜனநாயகவாதியா?- இணையம்.

அவை அப்படியே இருக்கட்டும். கருணா அம்மானிடம் கேட்க எம் வசம் ஒரு கேள்வி இருக்கிறது. இந்தத் தேர்தல் நெருக்கடி காலத்தில் ஏன் இதனைச் சொல்ல வேண்டும்? அரசுக்கு இதனால் நெருக்கடி வரும் என்றதை நன்கு அறிந்தும், கருணா இதனைப் பொது மேடையில் சொன்னதன் அரசியல் பின்னணிதான் என்ன? விளக்குவாரா கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன்..???




## வரலாறை அறிந்து வாயை திறவுங்கள்.

மன்னராட்சிக் காலங்களில் அரசவையில் அமைச்சர்கள், தளபதிகள், அறிஞர் பெருமக்கள், புலமை மிக்க மேதைகள் புடை சூழ அரசன் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் வேளைகளில் இவர்களுக்கிடையே அரசவை விதூஷகன் என்ற ஒருவரும் இருப்பார். பார்வைக்கு சில வேளைகளில் அவர் கோணங்கியாகவோ, கோமாளியாகவோ அல்லது எதுவுமே அறியாத ஒரு அப்பாவியாகவோ கூட தோற்றம் காட்டலாம் ஆனால் அவர் ஞானியா? அல்லது ஞான சூனியமா? என்பதை மன்னரே அறிவார்.

அரசனுக்கு கஷ்டங்கள், நெருக்கடிகள், சந்தேகங்கள் நேரும் போதோ அல்லது நாட்டுக்கும் ஆட்சிக்கும் ஆபத்துக்கள் தோன்றும் முன்னரோ இந்த விதூஷகனின் அறிவுரையோ வழி காட்டலோ எத்தகைய முக்கியத்துவம் மிக்கது என்பதை அரசவை மதியுரைஞர்கள் அனைவரும் அறிவர். எத்தகைய சிக்கலான, அதுவும் இடியப்பச் சிக்கலான பிரச்சினைக்கும் கூட தீர்வு காண அரண்மனை அமைச்சர் குழுவினர் அரசனுக்கு ஆலோசனை வழங்கத் தினறும் வேளைகளில் கூட, இந்த விதூஷகன் என்பவர் அரசனே வியக்கும் வண்ணம் வழக்கை கூறுவதும் வழக்கம். இவரிடம் இருக்கும் மற்றொரு அதிநுட்பமான சிறப்பம்சம் இவரின் நகைச்சுவை உணர்வு. இதன் காரணமாக அரசனுக்கு இவர் மீது பேரன்பும் ஏனையோருக்கு இதனால் அவர் மீது பெரு வெறுப்பும் இருப்பதுமுண்டு...

சரி.... இதெல்லாம் எதற்காக எழுதுகிறோம் என்கிறீர்களா? காரணமாகத்தான்...! அன்றைய மன்னரவையில் இருந்ததைப் போன்று இன்றும் கூட ஆட்சிமன்றத்தில் சிலர் விதூஷகர் போன்று செயற்படவே செய்கிறார்கள். ஆனால் இவர்களால் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கு என்ன லாபமோ, அனுகூலமோ தெரியவில்லை. ஆனால் இவர்களது செயற்பாடுகளும், விடும் அறிக்கைகளும் ஆட்சியில் உள்ளவர்களின் தரத்தை எத்தனை மட்டமாக எடைபோட வைக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்வதாக தெரியவில்லை.

கொஞ்சக் காலத்திற்கு முன்னால் கொவிட் 19 நாட்டுக்குள் தாக்குதலை தொடுக்க உள்நுழைந்த காலத்தில் அரசின் முக்கியஸ்தர் ஒருவர் நிலைமையின் விபரீதச் சூழலை புரிந்து கொள்ளாமல் “உலகின் மிகப் பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகளையே நாட்டிலிருந்து இல்லாமல் செய்தவர்கள் நாங்கள்... கொரோனா வைரஸை துரத்துவதா எமக்குக் கடினம்? ” என வீர வசனம் முழங்கினார்.

இலங்கையர் மட்டுமல்ல சர்வதேசத்தவரே அவரது அக்கூற்றை கேட்டு சிரித்தார்கள்.... இப்போது கொரோனாவுக்கு “மதிப்பளித்து” முகக்கவசம் அணிந்து திரிபவர்களில் அவரும் ஒருவர். அவர் இப்போது தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படாது என்று கூறியுள்ளதுடன் பொதுக் காரணிகள் நிமித்தம் தான் தீர்வு வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் அரசியல் சார்ந்தது அதனை அரசியல் ரீதியில் பேசியே தீர்க்க வேண்டும் என ஐந்து தசாப்த காலமாக தேசிய மற்றும் சர்வதேச அரசுகள் மட்டத்தில் கூடப் பேசப்பட்டு, விவாதிக்கப்பட்டு தீர்வுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப் பட்டு வந்துள்ள போது இன்னும் புதிய அரசியலமைப்பு மூலம் தீர்வு காணும் முயற்சிகள் தொடரும் என அரசு தரப்பில் கூறப்பட்டு வரும் வேளையில் “தமிழ் மக்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிடைக்காது.“ என “ஹெகலிய ரம்புக்வெல்ல” என்ற இந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திடீரென்று அறிவித்திருப்பது அவரது மொழியா? அரசின் மொழியா? இரு தரப்பினருக்குமே வெளிச்சம்!

அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியல் ரீதியில் தான் பேசி முடிவெடுக்கலாமே தவிர அடக்குமுறையாயோ, அதிகார மேலாதிக்கத்தாலோ, ஆயுத ரீதியிலோ தீர்வு காண முயன்றால் அதன் விளைவுகள் எத்தகைய பேரிடரை ஏற்படுத்தும் என்பதை இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்னரான ஆட்சியியல் வரலாற்றை பின்னோக்கிப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும். வரலாறு தெரியாமல் வாயைத் திறப்பது மீண்டும் ஒரு பேரழிவை நோக்கிய பயணத்துக்கே வழிவகுக்கும்.

இத்தகைய சமகால அரச விதூஷகர்கள் ஆட்சி அதிகாரத்தில் உள்ளோர்க்கு அறவுரையோ, அறிவுரையோ கூறாவிட்டாலும் பரவாயில்லை அவர்கள் அழிவுரைகளைக் கூறாதிருப்பது நலம்.
“யாகாவராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர்
சொல்லிழுக் குப்பட்டு” என்ற வள்ளுவர் வார்த்தைகளை இவர் போன்றோர் புரிந்து கொள்வது நன்று!


புதுமை மாதா சொரூபம் - 17 ஆம் நூ.ஆ.

# 400 ஆவது ஆண்டு நிறைவு

# யாழ்ப்பாண நகரத்தின் வரலாற்றுச் சுவடுகள்

## போர்த்துக்கேயர் காலத் தேவாலயங்கள்

இ. மயூரநாதன்

யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சி போர்த்துக்கேயரின் கையில் இருந்த 38 ஆண்டுகாலத்தில் கத்தோலிக்க மதத்துக்கு மட்டுமே அனுமதி இருந்தது. அதற்கு அரசாங்க ஆதரவும் இருந்தது. அப்போதைய யாழ்ப்பாண நகரில் பல கத்தோலிக்கத் தேவாலயங்கள் இருந்தன. இவற்றுள் ஒன்றைத் தவிர ஏனையவை 1621 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உருவானவை. அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் மதச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த மூன்று கிறித்தவ சபைகளைச் சேர்ந்தோரும் நகரத்தில் குரு மடங்களையும், தேவாலயங்களையும் நிறுவியிருந்தனர். இவர்களுள் யாழ்ப்பாணம் முழுமையாகப் போர்த்துக்கேயரின் கைக்கு வருமுன்னரே யாழ்ப்பாண இராச்சியத்தில் செயற்பட்டுக்கொண்டு இருந்தோர் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்தோர் ஆவர். இவர்களுடைய முக்கியமான தேவாலயத்துக்கு 1614 ஆம் ஆண்டில் அத்திவாரம் இடப்பட்டது. இதை உள்ளடக்கியே பின்னர் போர்த்துக்கேயரின் கோட்டை கட்டப்பட்டது.

இந்தத் தேவாலயத்தைத் தவிர டொமினிக்கன் சபையினருக்கும், யேசு சபையினருக்கும் தனித்தனியே குரு மடமும், தேவாலயமும் இருந்தன.


புதுமை மாதா தேவாலயத்தில் இருந்த மணி 1648

இவற்றுடன், மிசரிக்கோடியா எனப்படும் கருணை இல்லத்தோடு இணைந்து ஒரு தேவாலயம் இருந்தது. அக்கால நகரத்தில் இருந்த மேற்படி தேவாலயங்களுக்குப் புறம்பாக, இன்றைய யாழ்ப்பாண நகர எல்லைக்குள் அடங்கிய சுண்டிக்குழி, நல்லூர், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் ஒவ்வொரு கோயிற்பற்றுத் தேவாலயங்கள் இருந்தன. மொத்தமாக இன்றைய யாழ் நகர எல்லைக்குள் ஏழு கத்தோலிக்கத் தேவாலயங்கள் காணப்பட்டன. இவற்றுள் நல்லூர்த் தேவாலயமும், வண்ணார்பண்ணைத் தேவாலயமும் ஒல்லாந்தர் காலத்தில் 1665 ஆம் ஆண்டு வரையாயினும் ஓலை வேய்ந்த மண் கட்டிடமாகவே இருந்தன. போர்த்துக்கேயர் காலத்திலும் இவை இவ்வாறான கட்டிடங்களாகவே இருந்திருக்கும். சுண்டிக்குழித் தேவாலயம் கற்கட்டிடமாக அமைக்கப்பட்டிருந்தது. கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, நல்லூர் ஆகிய ஊர்களை உள்ளடக்கிய நல்லூர்க் கோயிற்பற்றுக்கான தேவாலயமே நல்லூரில் இருந்தது. பால்தேயஸ் என்னும் ஒல்லாந்த மதகுரு எழுதிய குறிப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு இன்று நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள கிறித்தவ தேவாலயம் இருக்கும் இடத்திலேயே போர்த்துக்கேயரின் தேவாலயம் இருந்தது என்றும், அது முன்னர் நல்லூர்க் கந்தசாமி கோயில் இருந்த இடத்திலேயே அமைக்கப்பட்டது என்றும் தற்கால ஆய்வாளர்கள் பலரும் நம்புகின்றனர்.



ஒல்லாந்தர் காலத் தொடக்கத்தில் நல்லூர்த் தேவாலயம்

போர்த்துக்கேயரின் வண்ணார்பண்ணைத் தேவாலயம் ஒட்டுமடப் பகுதியில் இன்று வெஸ்லிய தேவாலயம் இருக்கும் இடத்திலேயே அமைந்திருந்ததாக நம்பப்படுகின்றது. இங்கிருந்த போர்த்துக்கேயத் தேவாலயத்தை ஒல்லாந்தர் தமது தேவாலயமாக்கினர். பின்னர் அதைத் தம்வசம் எடுத்துக்கொண்ட பிரித்தானியர் அத்தேவாலயத்தை வெஸ்லிய மிசனுக்கு வழங்கினர். இன்றும் அவ்விடத்தில் வெஸ்லிய மிசனுக்குச் சொந்தமான ஒரு தேவாலயம் உள்ளது.
போர்த்துக்கேயரின் சுண்டிக்குழித் தேவாலயம், சுண்டிக்குழி, அரியாலை, கரையூர், கொழும்புத்துறை ஆகிய ஊர்களை உள்ளடக்கிய சுண்டிக்குழிக் கோயிற்பற்றுத் தேவாலயமாகும். இது பின்னர் ஏனைய போர்த்துக்கேயத் தேவாலயங்களைப் போலவே ஒல்லாந்தரின் கைக்கு மாறியது. பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்தில் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்த இத் தேவாலயத்தை கிறிஸ்டியன் டேவிட் என்னும் குருவானவர் ஒரு தேவாலயமாகப் பயன்படுத்தி வந்தார். காலப் போக்கில் இந்தத் தேவாலயமும் அது இருந்த நிலமும் சேர்ச் மிசனிடம் கையளிக்கப்பட்டது. இந்தப் பகுதியிலேயே தற்போது பரி. யோவான் கல்லூரியும், பரி. யோவான் தேவாலயமும் காணப்படுகின்றன. இன்றுள்ள தேவாலயக் கட்டிடம் 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில், முன்னைய இடத்தில் இருந்து சற்றுத் தள்ளிக் கட்டப்பட்டதாகத் தெரிகின்றது.
இம்மூன்று கோயிற்பற்றுத் தேவாலயங்கள் எதிலுமே போர்த்துக்கேயரினதோ, ஒல்லாந்தரினதோ கூறுகள் எவையும் இன்று இல்லை. காலத்துக்குக் காலம் இடம்பெற்ற திருத்த வேலைகளும், மீள் கட்டுமானங்களும் அக்காலத்து அடையாளங்கள் எதையுமே விட்டு வைக்கவில்லை. போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாண நகரத்தில் இருந்த எல்லாத் தேவாலயங்களுமே இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டன. கோயிற்பற்றுத் தேவாலயங்களைப் புரட்டஸ்தாந்த தேவாலயங்களாக மாற்றிப் பயன்படுத்திய ஒல்லாந்தர், நகரத்திலிருந்த கத்தோலிக்கத் தேவாலயங்கள் அனைத்தையுமே முற்றாக அழித்துவிட்டனர்.
1614 ஆம் ஆண்டில் அத்திவாரமிட்டுக் கட்டிய, நகரில் இருந்த பிரான்சிஸ்கன் தேவாலயம், 1591 இல் போர்த்துக்கேயப் படைகள் நல்லூரைத் தாக்கி வெற்றி பெற்றதை நினைவுகூருமுகமாக வெற்றிமாதா தேவாலயம் எனப் பெயரிடப் பட்டிருந்தது. இந்தத் தேவாலயத்துக்காக வெற்றி மாதாவின் மரச் சிற்பம் ஒன்று உள்ளூர்ச் சிற்பி ஒருவரின் வீட்டில் உருவாகிக்கொண்டு இருந்தபோது நிகழ்ந்த சில புதுமைகள் காரணமாக மாதாவைப் புதுமை மாதா என அழைத்ததுடன், தேவாலயமும் புதுமைமாதா தேவாலயம் எனப் பெயர் பெற்றது.

டொமினிக்கன் தேவாலயமும், யேசு சபையினரின் தேவாலயமும் ஒல்லாந்தர் காலத்தில் அழிக்கப்பட்டு விட்டன. ஒல்லாந்தருடைய நகரத்தில் கோட்டைக்குள் இருந்த புதுமை மாதா தேவாலயக் கட்டிடம் மட்டுமே ஒரு புரட்டஸ்தாந்த தேவாலயமாகச் சில காலம் பயன்பாட்டில் இருந்தது. அதுவும் பின்னர் அழிக்கப்பட்டுப் புதிய கோட்டைக்குள் வேறிடத்தில் ஒல்லாந்தரின் புதிய சிலுவை வடிவத் தேவாலயம் அமைக்கப்பட்டது. இந்த ஒல்லாந்தத் தேவாலயம் அண்மைக் காலம்வரை நல்ல நிலையில் இருந்து உள்நாட்டுப் போர்க் காலத்தில் முற்றாக அழிந்துவிட்டது.
ஆனாலும், போர்த்துக்கேயரின் தேவாலயத்தில் பயன்பாட்டில் இருந்த இரண்டு மணிகள் ஒல்லாந்தர் தேவாலயத்திலும் பயன்பாட்டில் இருந்தன. ஒல்லாந்தரின் தேவாலயம் அழிந்த பின்னரும் முழுமையாக இருந்ததாகத் தெரியவரும் இந்த மணிகளுள் ஒன்று இப்போது கொழும்பில் உள்ள ஒரு தேவாலயத்தில் உடைந்த நிலையில் இருப்பதாகத் தெரிகின்றது. இன்னொரு மணி அண்மைக் காலம் வரை யாழ்ப்பாணத்திலேயே இருந்தது. இப்போது எங்கு இருக்கின்றது எனத் தெரியவில்லை. இந்த மணிகளில் இருந்த எழுத்துப் பொறிப்புக்கள், இந்த மணிகள் 1648 ஆம் ஆண்டில் வார்க்கப்பட்டு யாழ்ப்பாணப் புதுமை மாதா தேவாலயத்தில் பொருத்தப்பட்டன என்பதைக் காட்டுகின்றன.
அத்துடன், புதுமை மாதா தேவாலயத்தில் இருந்த சொரூபம் இன்று இந்தியாவின் கோவாவில் உள்ள தேவாலயமொன்றில் வைக்கப்பட்டுள்ளது. ஒல்லாந்தரிடம் தோல்வியுற்ற போர்த்துக்கேயப் படையினர், போர்க் கைதிகளாக இன்று ஜக்கார்த்தா என அழைக்கப்படும் பத்தேவியாவுக்கு அனுப்பப்பட்டபோது இந்தச் சொரூபமும் மறைவாக எடுத்துச் செல்லப்பட்டதாம். அது சில ஆண்டுகளின் பின்னர் கோவாவுக்கு வந்து சேர்ந்தது. தற்காலத்தில் கோவாவுக்குச் செல்லும் இலங்கையர் இச்சொரூபத்தைப் பார்வையிடுவதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படுவதாகத் தெரிகின்றது.


யேசு சபையினரின் தேவாலயமும் குருமடமும்

சுவடுகள் தொடரும்...

# தேர்தலுக்காகப் புலிக்கவசம் போடும் சம்பந்தன்

- செம்பருத்தி -

“போக்கிரிகளின் புகலிடம் அரசியல்” என்று ஏன் சொன்னார்களோ தெரியவில்லை, ஆனால் இலங்கையின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியலை அவ்வாறு போக்கிரிகளின் புகலிடம் என்று அழைத்தால் அதில் தவறு இல்லை ..தேர்தல் என்று வந்து விட்டால் கடந்த ஐந்து ஆண்டுகளாக எவற்றைச் சொன்னார்களோ! எதனைச் செய்தார்களோ! அதற்கு முற்றிலும் எதிரான கருத்துகளை மக்கள் முன் வைப்பார்கள்..தாங்கள் இதுவரை சொன்னவற்றை மக்கள் மறந்திருப்பார்கள் என்று தான் அவர்கள் நினைத்துக் கொண்டு இவ்வாறு அரசியல் செய்கிறார்கள்போலும்.


புலிகள் தான் தமிழ் மக்களின் கவசம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இப்பொழுது கூறியுள்ளார் அன்று போராட்டம் நடந்தபோது தமிழ் மக்களின் கவசமாகப் புலிகள் இருந்தார்களாம்.

புலிகளின் கொலைப் பட்டியலில் தனது பெயர் இருந்தது என்று கூறி வந்த சம்பந்தன், இப்பொழுது தமிழ் மக்களின் கவசமாக இருந்தார்கள் புலிகள் என்று கூறியுள்ளார்.தேர்தல் நெருங்கி வந்து விட்டது. மக்களிடம் வழமை போன்று புலிகள் புராணம் பாடினால் தான் வாக்குகள் கிடைக்கும். எனவே இந்த முறை “புலிகள் தமிழ் மக்களின் கவசமாகத் திகழ்ந்தார்கள்” என்று சம்பந்தன் சொல்லுகிறார். அப்பொழுது என்னசெய்து கொண்டு இருந்தார்? அந்த நேரத்தில தனது பெயர் புலிகளின் கொலைப் பட்டியலில் இருந்தது என்று யாரைத் திருப்த்திப்படுத்த சம்பந்தன் அவ்வாறு கூறினார். அவரது பெயர் கொலைப் பட்டியலில் இருந்திருந்தால் இவர் எவ்வாறு அவர்களைச் சந்திக்க கிளிநொச்சிக்குச் செல்ல முடிந்தது? யார் அழைத்தார்கள் அல்லது யார் சொல்லி அங்கு சென்றார்? வேறு யார் சொல்லியும் அங்கு செல்ல முடியாது. ஆனா படியால் இவர் அவர்களது அழைப்பின் பேரில் தானே கிளிநொச்சிக்குச் சென்றிருக்க முடியும். இவரது பெயரைப் பட்டியலில் வைத்திருந்தவர்கள் பின்னர் எதற்காக அங்கு அழைக்க வேண்டும்.? இவற்றிற்குச் சம்பந்தன் தான் விடையளிக்க வேண்டும். ஏனெனில் தனது பெயர் அவ்வாறு உள்ளது என்று கூறியவர் சம்பந்தனே ஆவார்..

தடுப்புக் காவலுக்குப் பயந்த அறப்போர் வீரன் சம்பந்தன்.

ஆயுதப் போராட்டம் நடைபெற்று இருக்காவிட்டால் அறப்போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றிருக்க முடியும்.என்று சம்பந்தன் சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்..இக்கூற்றின் மூலம் சம்பந்தன் என்ன சொல்லுகிறார் என்றால் ஆயுதப் போராட்டம் எமது உரிமைகளைப் பெற வழி சமைக்கவில்லை .புலிகள் போராடியிராவிட்டால் தாங்கள் அறவழியில் போராடி உரிமைகளை மீட்டிருப்பார்களாம் இதிலே தான் மிகப் பெரிய நகைச்சுவை உள்ளது. சம்பந்தன். எத்தனை பெரிய அறப்போர் வீரன் என்பதும் 1961 இல் தந்தை செல்வா தலைமையில் நடந்த அறப்போரில் இவர் காட்டிய துணிவு எத்தகையது என்பதும் வரலாற்றில் ஊன்றிப் பதிவிடப்பட்டுள்ளது. புலிகள் ஆயுதம் ஏந்திப் போராடியிராவிட்டல் அறவழியில் போராடியிருப்பாராம் சம்பந்தன். இது எவ்வளவு கோமாளித்தனமான கூற்று என்பது தெரியமா? ஏனென்றால் இவர் எவ்வாறான அறப்போராளி என்பது உலகறிந்த ஒன்றாகும்.தந்தை செல்வா 1961இல் நடாத்திய அறப்போராட்டம் மிகப் பெரிய போராட்டமாகும். தமிழ் மக்களில் அறுபது விழுக்காட்டிற்கு மேல் திரண்டு போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்தும் பங்கு பற்றியும் இருந்தனர். பிரதம அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இரண்டு திங்கள்களாகத் தனது ஆட்சி தமிழர் தாயகத்தில் நடைபெறவில்லை என்று அறிவித்திருந்தார். அப்போராட்டத்தைக் குலைக்கச் சிறிமாவோ 1961ஏப்பிரல் 17 நள்ளிரவு அவசராகாலச் சட்டத்தைப்பிரகடனப்படுத்தி தலைவர்களைக் கைது செய்து பனாகொட இராணுவ முகாமில் தடுத்து வைத்தார். அப்போது திருகோணமலையில் கைதானவர்களில் சம்பந்தனும் ஒருவராவார். அவர் சிறிமாவோவிற்கு ஒரு கடிதம் எழுதித் தான் இப்போராட்டத்திற்கு ஆதரவானவன் அல்ல என்றும் சட்டத்தரணிகள் பங்கு பற்றியதால் இளம் சட்டத் தரணி என்ற வகையில் அதில் பங்குகொண்டதாகவும் எனவே தன்னை விடுதலை செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். சிறிமாவோ அவரை உடனே விடுதலை செய்து விட்டார். இத்தகைய வீரமுள்ள அறப்போர் வீரரான சம்பந்தன் கூறுகிறார் ஆயுதப் போராட்டம் நடந்திராவிட்டால் தாங்கள் அறப்போராட்டத்தின் மூலம் உரிமைகளைப் பெற்று இருப்பார்களாம். என்ன விசித்திரமான அரசியல்வாதிகள் இவர்கள்?.. போராளிகள் அதாவது புலிகள் தமிழ் மக்களின் கவசம் என்கிறார் ஆனால் அந்தக் கவசம் இல்லாமலிருந்தால் அறப்போராட்டத்தின் மூலம் உரிமைகளை பெற்றிருப்போம் என்கிறார் இந்தஅறப்போர் வீரன்.. புலிகள் ஆயுதம் ஏந்தியதால் தங்களால் உரிமைகளைப் பெற முடியாமல்




செய்து விட்டார்கள் என்று சொல்லுகிறார் சம்பந்தன். 2009 க்குப் பின்னர் மக்கள் அறவழியில்போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவை எதிலும் பங்குபற்றாது பாதுகாப்பாக இருக்கும் சம்பந்தன் நேரத்துக்கு ஒரு கதை கதைத்துக் கொண்டு அரசியல் பிழைப்பு நடாத்திக் கொண்டிருக்கிறார்.

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புலிகளா உருவாக்கினார்கள்“ என்ற வினாவிற்கு கிளிநொச்சிக்கும் அதற்கும் தொடர்பா? இல்லையே என்கிறார் சம்பந்தன்.

இக்கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் புலிகளின் தோற்றம் 1970 களின் பின்னால் ஏற்பட்டது ஆனால் தமிழரசுக்கட்சி 1949 இல் தொடங்கி பல்வேறு காலகட்டத்தில் வெவ்வேறு பெயர்களைக்கொண்டு இயங்கி இப்பொழுது கூட்டமைப்பு என்று பெயர் கொண்டுள்ளது என்கிறார். இதனைச் சம்பந்தனும் ஏற்றுக்கொள்கிறார்..அதாவது புலிகளுக்கும் தங்கள் கட்சிக்கும் அறவே தொடர்பு இல்லை என்று கூறி விட்டு இப்பொழுது புலிகள் கவசமாக இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றினார்கள் என்றும் புகழ் பாடுகிறார் சம்பந்தன்

தங்களுடன் தான் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பேசுகிறார்கள். தங்களைத்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று வெளிநாடுகள் அங்கீகரிக்கின்றன. எனவே தங்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமாம் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சொல்லி வருகின்றனர். இது ஒரு வேடிக்கையானதும் கேலிக்கிடமானதுமான கூற்றாகும். இவர்களை வெளிநாடுகள் ஏன் மக்கள் பிரதிநிதிகள் என்று ஏற்றுக் கொள்கின்றனர்? அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதனால். இவர்களை விட்டு வேறு ஒரு பகுதியினரை மக்கள் தேர்ந்தெடுத்தால் வெளிநாட்டவர் அவர்களுடன்தானே பேசப்போகிறார்கள் மக்கள் தேர்ந்தெடுப்பவர்களுடன் தானே பேச வேண்டும். ஆனால் இவர்கள் கூறுகிறார்கள் தங்களுடன் பேசுவதால் தங்களைத் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்ப வேண்டுமாம்.இதுவும் ஒரு நகைப்புக்கிடமான கூற்றாகவே உள்ளது.

தமிழ்மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். மாற்று அணி மாற்றுத் தலைமை என்பது தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதைக்கும் சதி என்று சமபந்தன் கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலம் பொருந்தியதாக நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்று சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைத்தவர்கள் யார்? அல்லது தமிழ் மக்களின் ஒற்றுமை குலைவதற்கு எது காரணியாகும்? தமிழ்த் தேசியம் தாயகம் என்ற தமிழ் மக்களின் அடிப்படையை குலைத்துவிட்டு ஒற்றுமை ஒற்றுமை என்று கூக்குரல் இடுவதால் ஒற்றுமை ஏற்பட்டுவிடுமா ?

முன்னைய ஆட்சியில் தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பு வரைவில் உள்ளவைகளைக் கோத்தபாயா அரசு ஏற்றுக்கொண்டால்.. கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கொடுக்கத் தயாராக உள்ளதாகச் சுமந்திரன தெரிவித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக அவர் அறிவித்துள்ளது தான் மிகவும் வியப்பான கூற்றாகும். மைத்திரிபால சேனநாயக்கா நாடாளுமன்றத்தைக் கலைத்தது செல்லாது, அரசியல் யாப்பின் பத்தொன்பதாவது திருத்தத்திற்கு மாறானது என்று வழக்குத் தீர்ப்பு வந்தபோது சனநாயகத்தைக் காப்பாற்றி விட்டோம் என்று கூறிய சுமந்திரன் இன்று சனாதிபதியும் ஆட்சியாளர்களும் பத்தொன்பதாவது திருத்தம் நீக்கப்பட வேண்டும் என்று கூறி வரும் நிலையில் பத்தொன்பதாவது திருத்தம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார் .சனாதிபதித் தேர்தல் காலத்தில் இவர்களுக்கும், கோத்தபாயாவுக்கும் இடையில் கமுக்கமான உறவுள்ளதாகப் பேச்சு அடிபட்டிருந்தது. ஆனால் இப்பொழுது அது உண்மைதான் என்று நம்புமளவுக்குச் சுமந்திரன் பத்தொன்பதாவது அரசியல் யாப்புத் திருத்தம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று கூறியதன் மூலம் உறுதிப்படுத்தப் படுகிறது. பத்தொன்பதாவது திருத்தம் என்பது மிகச் சிறு அளவில் சனாதிபதியின் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது. நாடாளுமன்றத்தை கலைத்தல் மற்றும் நிர்வாக ஆணைக்குழுக்களை அமைத்தல் போன்ற சிறு சிறு நியமனங்களை நாடாளுமன்றம் செய்ய எண்டும் என்பதே அத்திருத்தமாகும். அதனையே நீக்க வேண்டும் என்று சனாதிபதி விரும்புகிறார்.சனநாயகத்தை எந்த விதிகளின் கீழ்க் காப்பாற்றினோம் என்று கொண்டாடியவர் இன்று அதையே நீக்கக் கூட்டமைப்பு ஆதரவு கொடுக்கும் என்கிறார். ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடன் ஒட்டி உறவாடுவதே கூட்டமைப்பின் இன்றைய குறிக்கோளாகவுள்ளது. அன்று புலிகளால் எதற்காகக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அதற்கு முற்றிலும் எதிராக இன்று கூட்டமைப்புச் சென்று கொண்டிருக்கிறது. இவ்வாறு நாடாளுமன்ற சுகபோகங்களை அனுபவிப்பதற்காகத் தேர்தல் காலத்தில் புலிகள் புகழ் பாடுவதில் வல்லவர்களாகக் கூட்டமைப்பினர் உள்ளனர்.

புலிகள் தமிழினத்தின் கவசமாகவே அன்று தொட்டு இருந்தார்கள் என்பது சம்பந்தன் சொல்லித்தான் தமிழினம் அறிய வேண்டியதில்லை. ஆனால் சம்பந்தனும் கூட்டாளிகளும் புலிகள் தமிழினத்தின் கவசமாக இருந்துள்ளார்கள் என்ற கூற்று தேர்தலுக்கான கவசமாகக் கூட்டமைப்பினர் பயன்படுத்துகின்றனர் என்றதுதான் உண்மை. உண்மையில் புதிய போர்வையுடன், பழைய பாத்திரத்துடன் தேர்தலைச் சந்திக்கிறது கூட்டமைப்பு..



# தேர்தல் காலமும் தேரோபதேசமும்

- குருபார்வை -

தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மெல்ல மெல்லச் சூடேறத் தொடங்கி விட்டதாகத் தென்னிலங்கைச் செய்திகள் மூலம் அறியவருகிறது.

ஆனால் வடக்கிலும், கிழக்கிலும் மக்களுக்கான அரசியல் என்பது மிகமிக மந்தமான நிலையில் நகரவே தொடங்காத சூழலில், தமிழ்க் கட்சிகளுக்கிடையேயான முரண்நிலைக் காழ்ப்புணர்வு அரசியல் என்பது மக்களை அலுப்பும், சலிப்பும், வெறுப்பும் அடையச் செய்துள்ளது என்பதே யதார்த்தம்.

தென்பகுதியில் பௌத்த - சிங்கள பேரினவாத அரசியல் என்பது முனெப்போதும் இல்லாத அளவுக்கு மூர்க்கம் கொண்டு விஸ்வரூபம் எடுத்து வருகிறது. குறிப்பாக, தேர்தல் கால வாக்கு வங்கியை இலக்கு வைத்து, ஜனாதிபதி கோத்தாபாய வினால் மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு உருவாக்கியுள்ள - வடக்கையும், கிழக்கையும் பௌத்த சிங்கள மூதாதையரின் முதுசநிலமாக மாற்றும் வரலாற்றை உருவாக்கும் உள்நோக் குடனான - ஜனாதிபதி செயலணிகள், தமிழ் - முஸ்லிம் மக்களுக்குப் பேரதிர்ச்சியையும், பௌத்த சிங்கள அடிப்படைவாதிகளுக்குப் பேருவகையையும் ஏற்படுத்தியுள்ளமை இத் தேர்தலின் பிரதான பேசு பொருளாகியுள்ளது.

ஒரே நாடு - ஒரே தேசம், என்று இலங்கைத் தேசியம் பாடும் தென்னிலங்கை அரசியலின் பிரதான தலைமைகள் அடிப்படையில் பௌத்த, சிங்கள இனவாதிகளாகத் தம்மை இனங்காட்டித் தேர்தலில் வகுப்புவாத அரசியலை முன்னெடுப்பதென்பது இலங்கை அரசியலில் புதினமான விடயமல்ல.

ஆனால், இம்முறை அது தன்னை வெளிப்படையாகவே இனங்காட்டி, முகங்காட்டி, சிறுபான்மை சமூகத்தவரை அச்சுறுத்தி நிற்பது தான் இந்நாட்டில் சிறுபான்மை சமூகத்தவருக்கு சவாலான விடயமாகியுள்ளது. குறிப்பாகப் பௌத்தமத தீவிரவாத அல்லது அடிப்படைவாத அமைப்புகள் பலவும் கோத்தாபாயவின் முயற்சிகளுக்கு உத்வேகமும், ஊக்கமும் அளிக்கும் வகையில் அவரை மேலும் உசுப்பேத்தி வருவது தான் இந்த நாட்டின் எதிர்காலம் குறித்த சந்தேகங்களை அதிகப்படுத்தி நிற்கின்றன.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்னாவின் தலைமையில் உருவாக்கப்பட்டு, மிகுந்த சர்ச்சைகளுக்கும், சந்தேகங்களுக்கும் உள்ளாகி விவாதப் பேசுபொருளாகி இருக்கும் கிழக்கின் தொல்பொருள் பிரதேசங்களை இனங்கண்டு, கண்காணித்து, பாதுகாக்கும் நடவடிக்கைக்கான ஜனாதிபதி செயலணி போன்ற கட்டமைப்பினை வடக்கிலும் உருவாக்க வேண்டும் என்றும், அதனை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதியை வற்புறுத்தப் போவதாக எல்லாவல மெத்தானந்த தேரர் என்பவர் அறிவித்துள்ளார்.

இவரைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியது எதுவுமில்லை. நாடு நன்கறிந்த பௌத்த சிங்கள இனவாதியான இவரது கருத்துக்கள் எப்போதுமே சிறுபான்மை சமூகத்தவரின் நலன்களுக்கு எதிரானவை மட்டுமல்ல, அவர்களின் இந்த மண்ணிலான சகலவிதமான அடிப்படை அரசியல், சமூக, கலை, கலாசார பண்பாட்டு ரீதியிலான வரலாற்று உரிமைகளை முற்றாக நிராகரிக்கும் தன்மை கொண்டனவுமாகும்.

வடக்கே நாகவிகாரை உட்பட வேறு சில பகுதிகளிலும் பௌத்த வரலாற்று அடையாளங்களைக் கொண்ட தொல்பொருள் பிரதேசங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் கூறும் பௌத்தானந்த தேரர், தெற்கே தூபாராம விகாரை முதல் வடக்கே நாகவிகாரை அடங்கலான சகல பிரதேசங்களிலும் நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையிலான முழுமையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள துரிதமாகச் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

கிழக்கில் ஜனாதிபதியின் செயலணியில் அங்கம் வகிக்கும் பௌத்தானந்த தேரரின் ஆசை, இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக உலகிற்கு இனங்காட்டும் நோக்கிலானது என்பதை விபரிக்க வேண்டியதில்லை. கடந்த காலங்களில் அவரது செயற்பாடுகள், விடுத்துவரும் அறிக்கைகள் என அனைத்துமே ஒரு மத அடிப்படைவாதிக்கான சகல குணாம்சங்களை கொண்டவை என்பதை பௌத்த மதவாதிகள் மட்டுமல்ல சிங்கள இனவாதிகளும் கூட வெளிப்படையாக ஒப்புக்கொண்டு அவருக்கு ஆதரவு தெரிவித்து வருவதனால் அவரது செல்வாக்கு சிங்கள அரசியல்வாதிகள் மட்டத்திலும் அதிக செல்வாக்கை கொண்டதாக உள்ளது என்பதில் இருவேறு கருத்துகிடையாது.

மெத்தானந்த தேரரின் கருத்துப்படி கிழக்குக்கென உருவாக்கப்பட்ட செயலணியே வடக்குக்கும் செயற்பட முடியும், அதற்கு தனியான செயலணி தேவையில்லை எனவும் அறிய முடிகிறது. இங்கே அவர் குறிப்பிடும் மற்றுமொரு விடயம் என்னவென்றால் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு என்றும் மரபுரிமை சார்ந்த இடங்கள் இருக்கின்றதென ஒப்புக்கொண்டுள்ளமையும், அவற்றையும் பாதுகாக்க வேண்டும் என எண்ணியதையும் சொல்லலாம்! நம்பலாமா?



தொல்பொருள் ஆய்வுக்குரிய மையங்களைப் பாதுகாக்கச் செயலணிகளை உருவாக்கும் ஜனாதிபதி ஒரு தொன்மைவாய்ந்த தனித்துவ மரபுரிமைகளைக் கொண்டதும் ஒரு தொன்மைமிகு மொழி மற்றும் கலை, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டதுமான, இன்னமும் அத்தகைய அடையாளங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு இனத்தின் நியாயமான வாழ்வுரிமையை வழங்க மறுப்பதும் அத்தகைய பிரச்சினைக்குரிய நீதியான, நியாயமான தீர்வொன்றை வழங்கப் பின்னடிப்பதும் அல்லது மறுப்பதும் ஏன் என்ற கேள்வி இச்சமயத்தில் எழவே செய்கிறது?

“வாழ்வுரிமையை நிராகரித்துவிட்டு மரபுரிமையைப் பாதுகாப்போம்“ என அறை கூவல் விடுப்பது நகைப்புக்கிடமான விடயமே! வரலாற்றைத் திரித்தல் அல்லது மறைத்தல், சில வேளைகளில் ஒரு இனத்தை மேம்படுத்த மற்றொரு இனத்தின் பாரம்பரிய முதுசங்களை அழித்தல் என்பதெல்லாம் மரபுரிமைகளைப் பாதுகாத்தல் என்ற செயற்பாட்டுக்குள் அடக்க நினைப்பது மானுட வரலாற்றை மறுதலிக்கும் செயற்பாடுகளேயாகும்.

எல்லாவல மெத்தானந்தர், பொதுபல சேனாவின் ஞானசாரர் போன்றவர்கள் பேசும் சிங்கள, பௌத்த பேரினவாத அடிப்படைவாதம் எதிர்கால வரலாற்றில் சிங்கள இனத்தினதோ அல்லது பௌத்தமதத்தினதோ பெருமையை உலகளாவிய ரீதியில் எந்த வகையிலும் கௌரவப்படுத்தாது என்பது மட்டும் சர்வ நிச்சயம்.

இதேவேளை பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் பார்வை, சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தவர் மீது பாயத் தொடங்கியுள்ளது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயம்...

ஒருபுறம் மரபுரிமைகள் குறித்துப் பேசும் தேரரின் பௌத்த, சிங்கள அடிப்படைவாதப் பார்வை, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் முஸ்லீம் மக்கள் மீது அனலாகத் தகிக்கத் தொடங்கியது. அதாவது அவரது அண்மைக்கால அறிக்கையானது இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாத தீவிரவாத அமைப்புகள் 43 செயற்படுவதான புள்ளிவிபரம் ஒன்றைக் கொண்டதாக உள்ளது. தனித்தனியா 43 அமைப்புகள் இருந்தாலும் அவை இஸ்லாமிய அடிப்படைவாதம் என்ற கொள்கையில் ஒன்றாகவே செயற்பட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்டிருக்கும் இரண்டு விடயங்களுக்கும் தேர்தல் காலத்திற்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. இந்த நாட்டின் தமிழ், முஸ்லீம் சிறுபான்மை சமூகத்தவர்களின் எதிர்கால இருப்பை இந்த நாட்டில் கேள்விக் குறியாக்கும் தொனிப்பொருளைக் கொண்டவையாக உள்ளது என்பது அரசியல் நோக்கங்களின் கருத்தாகும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் முடிவின் பின்னர், இந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் ஆதரவின்றித் தனியாகப் பௌத்த சிங்கள மக்களின் முழுமையான ஆதரவுடன் பதவிக்கு வந்த ஜனாதிபதியாக தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக கோத்தாபாய ராஜபக்ஷ பெருமைப் பட்டுக்கொண்டது நினைவிருக்கலாம். அதன் பின்னரே இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என்ற கருத்தியலுக்கு வலுவூட்டும் நிகழ்வும் கூர்மை படத் தொடங்கி, இப்போது நடைபெறப் போகும் தேர்தல் முடிவுகள் அந்தக் கருத்தியலுக்கு மேலும் பலம் சேர்ப்பதாக இருக்க வேண்டும் என்பதே சிங்கள பௌத்த அடிப்படைவாதச் சக்திகளின் பெரு விருப்பாக உள்ளது என்பதும் வெளிப்படை.

அண்மையில் பொதுமக்கள் முன்னணியின் பங்காளிக் கட்சியாக புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில விடுத்துள்ள செய்தியில் “கோத்தாபாய ராஜபக்ஷவுக்கு ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் முஸ்லிம் மக்கள் வாக்களிக்கவில்லை. சிங்கள மக்கள் அள்ளி வழங்கிய வாக்குகளாலேயே அவர் வெற்றி பெற்றார். தமிழ், முஸ்லிம் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் விட்ட தவறை நாடாளுமன்றத் தேர்தலிலும் விடவேண்டாம்” என்று கூறியுள்ளார்.

இக்கூற்று வேண்டுகோளா? எச்சரிக்கையா? தேர்தல் காலத்தில் விடப்படும் இத்தகைய அறிக்கைகளை வெறும் வார்த்தைகளாகக் கணித்து விடமுடியாது. இதனுள் இருக்கும் அரசியல் வேறுபல செய்திகளைக் கொண்டதாகவும் இருக்கலாம்.



- ஐ.வி. மகாசேனன் -

# சீனா – இந்திய எல்லைப் பிரச்சினை வல்லரசுப் போட்டிக்கான ஒத்திகையா?

இருபதாம் நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு என்பது 18ஆம் நூற்றாண்டுக் காலத்திலிருந்தே உரையாடப்பட்டு வருகிற போதிலும், கொரோனா அபத்தமும் அது ஏற்படுத்திவரும் மாறுதல்களும் 21ஆம் நூற்றாண்டை ஆசியாவின் நூற்றாண்டாய் சடுதியாக உறுதிப்படுத்துவதாக அமைகிறது. இதனைத்தொடர்ந்து சர்வதேச அவதானிப்பு ஆசியாவில் சூழந்துள்ள நிலையில் சீனா - இந்தியா எல்லை முரண்பாடு சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் பல வினாக்களையும் ஆச்சரியத்தையும் உருவாக்கியுள்ளது. இந்த நேரத்தில் சீனா ஏன் இந்தியாவை விரோதமாக தேர்வு செய்துள்ளது?அமெரிக்காவுடனான சீனாவின் உறவு வீழ்ச்சியடைந்து வருகிறது் சீனா ஏற்கனவே கொரோனா வைரஸ் நெருக்கடி தொடர்பாக சர்வதேச சமூகத்திடமிருந்து ஓ் எதிர்ப்பை பெற்று வருகிறது்தென் சீனக் கடலில் புதிய சவால்களை எதிர்கொண்டு வருகிறது, மற்றும் முன்னோடியில்லாத சமூக அமைதியின்மைக்கு மத்தியில், குறிப்பாக ஹாங்காங்கில். இந்தியாவுடனான தற்போதைய நெருக்கடியைத் தூண்டுவதற்கு அல்லது தீவிரப்படுத்துவதற்குப் பின்னால் சீனாவின் நோக்கம் அல்லது நோக்கங்கள் என்னவாக இருக்கும்? எனப்பல கேள்விகளைச் சர்வதேச அரசியல் ஆய்வாளர்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையிலேயே இந்திய – சீன எல்லையை மையப்படுத்தி மூளும் முரண்பாட்டின் அரசியல் பின்னணியை தேடுவதாகவே இக் கட்டுரை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தியா - சீனா எல்லை பிரச்சனை கடந்த சுமார் ஐந்து வார காலமாக பூதாகரமாகி உள்ளது. கிழக்கு லடாக்கில் உள்ள பாங்கோங் த்சோ ஏரியில் சீனா தனது ரோந்து படகுகளின் நடமாட்டத்தை அதிகரித்துள்ளதாக செய்திகள் வெளியாகின. மே மாதத் தொடக்கத்தில் இந்த ஏரியின் அருகே இந்திய மற்றும் சீன வீரர்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டது. இந்தப் பகுதி லடாக்கின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அருகில் உள்ளது. அக்சாய் சீனாவின் கல்வான் பள்ளத்தாக்கில் சீன ராணுவத்தின் சில கூடாரங்கள் அமைக்கப்பட்டிருப்பதாக இந்தியா கூறியது. அதன்பிறகு அங்கு தனது இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரித்தது. ஆனால் சீனாவோ, கல்வான் பள்ளத்தாக்கு அருகே சட்டவிரோதமாக பாதுகாப்பு தொடர்பான கட்டுமானங்களை இந்தியா செய்து வருவதாக குற்றம் சாட்டியது. லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் ஆயிரக்கணக்கான சீன துருப்புகள் நுழைந்துள்ளதாக அதிகாரிகள் கூறியதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்தியா தனக்கு சொந்தமான இடம் என்று கருதும் எல்லைப்பகுதிகளில் சீனப் படைகள் கூடாரம் அமைத்து, சுரங்கங்கள் தோண்டி அதன் வழியாக கனரக உபகரணங்களை கொண்டு வந்துள்ளதாக இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே,லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில், இந்திய மற்றும் சீன இராணுவத்தினரிடையே கடந்த திங்கள்(15.06.2020) இரவு நடந்த மோதலில் உயிரிழந்த இந்திய இராணுவ துருப்புகளின் எண்ணிக்கை இருபதாக அதிகரித்துள்ளதாக இந்திய இராணுவம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. மேலும் நான்கு இந்திய ராணுவத்தினர் கவலைக்கிடமாக இருப்பதாக இந்திய அரசின் வட்டாரங்கள் தெரிவிப்பதாக ஏ.என்.ஐ செய்தி முகமை தெரிவிக்கிறது. இரு நாட்டு இராணுவ வீரர்களும் ஆணிகள் அடங்கிய கட்டை, மூங்கில் குச்சி, மட்டை போன்றவற்றால் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டதாக கூறப்படுகிறது. யார் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தப்படவில்லை. தற்போது உள்ள பிரச்சனையை தீர்க்க அரசு ரீதியாகவும்,இராணுவ ரீதியாகவும் இந்தியாவும் சீனாவும் நெருங்கிய பேச்சுவார்த்தையில் உள்ளது என சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும், எல்லைக் காட்டுப்பாட்டு கோட்டைக் கடந்து சீனப் பகுதியில் இந்த மோதல் நடந்துள்ளது. எனவே இதற்கு சீனா பொறுப்பல்ல எனவும் அந்த அமைச்சத்தின் செய்தித் தொடர்பாளர் ஷாவோ லிஜியன் கூறியுள்ளதாக சீன அரசின் குளோபல் டைம்ஸ் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 45 ஆண்டுகளில் இரு நாட்டு ராணுவத்தினரிடையே மிக மோசமான தாக்குதலாக இது அமைந்துள்ளது. கடைசியாக 1975ஆம் ஆண்டு இந்தியாவின் அருணாச்சல பிரதேச எல்லை இந்தியா மற்றும் சீன இராணுவத்தினர் இடையே துப்பாக்கிச்சூடு நடந்தது. இதில் நான்கு இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இதை சில முன்னாள் தூதர்கள், தாக்குதல் என்றும் சிலர் விபத்து என்றும் கூறியிருந்தனர் சீனாவின் அரசு ஊடகங்களும் இந்த சம்பவத்தைப் பற்றிய தகவல்களைக் கட்டுப்படுத்தாமல்,பெரும்பாலும்ஒரு சில கட்டுரைகளில் மட்டுப்பாடுடன், இந்தியா சட்டவிரோதமாக அத்துமீறுவதுடன், எல்லையைத் தாண்டி கால்வான் பள்ளத்தாக்கு பிராந்தியத்தில் சீனாவின் நிலப்பரப்பில் பாதுகாப்பு வசதிகளை நிர்மாணிக்கிறது என்ற உத்தியோகபூர்வ நிலைப்பாட்டைப் பற்றிக் கூறியது. தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் தவிர சீன எல்லைப் படையினருக்கு வேறு வழியில்லாமல் உள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இருப்பினும், மறுபுறம், சீனாவின் அரசு கட்டுப்பாட்டில் உள்ள இணையத்தில் இந்த விவகாரத்தில் சில உற்சாகமான விவாதங்களும் கலந்துரையாடல்களும் நடந்துள்ளன. இது சீனா நிலைமையை எவ்வாறு கையாளக்கூடும் என்பதற்கான முக்கியமான குறிப்புகளை வழங்குகிறது.

இந்தியாவில், எல்லையில் உள்ள தற்போதைய நெருக்கடி பெரும்பாலும் உலகெங்கிலும் சீனாவின் தொற்றுநோய்க்கு பிந்தைய உறுதியான வெளியுறவுக் கொள்கையின்தொடர்ச்சியாகவும், சமீபத்திய காலங்களில் சீனா-இந்தியா உறவுகளின் ஒட்டுமொத்த ஆதாரத்தின் வீழ்ச்சியாகவும் காணப்படுகிறது. ஆசியாவின் நூற்றாண்டில் சீனா தன் நிலையை உறுதிப்படுத்த இந்தியாவின் மூலோபாய நடவடிக்கைகளை தடைசெய்வதுடன், இந்தியாவிற்கு எதிரான சர்வதேச கருத்தியலை உருவாக்கவே எல்லைப்பிரச்சினையை ஆயுதமாக எடுத்துள்ளது என்பதை அறிய முடிகிறது. முதலாவது,சீனா தனது தெற்காசிய கொள்கையை இன்னொரு முறை கவனிப்பதாகத் தெரிகிறது.லடாக் மற்றும் சிக்கிமில் உள்ள பரந்த சீனா-இந்தியா முரண்பாடுகளுக்கு துணைப்பிரிவாக கலபானி மீது இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையில் ஒரே நேரத்தில் உயர் அழுத்தங்கள் வெடித்ததாக சிலர் சந்தேகிக்கின்றனர். சீன வெளிப்பாட்டில், இந்தியா-நேபாள எல்லை வரிசை முக்கிய சதி என்றும் தெரிகிறது. நிலைமையைப் பார்க்கும்போது,சர்வதேச அளவில் இந்தியாவுக்கு எதிரான ஒரு பொதுக் கருத்துத் தாக்குதலைத் தொடங்குவதே நிகழ்ச்சி நிரலாகும். இந்தியாவை தெற்காசியாவின் மிகப்பெரிய மற்றும் ஒரே ஸ்திரமின்மைக்குரிய காரணியாக சித்தரிக்கிறது. “ஓநாய் லட்சியங்களைக் கொண்ட ஒரு நாடு”, இது ஒரே நேரத்தில் நாடுகள் அவற்றின் அளவைப் பொருட்படுத்தாமல், அனைத்து அண்டை நாடுகளுடனும் முரண்பாட்டை தூண்டுகிறது. எனும் வகையிலான சீன பிரச்சாரம் இந்தியாவை தெற்காசியாவில் ஒரு விரிவாக்க சக்தியாகக் கருதுகிறது. அது “பாகிஸ்தானைக் கலைத்து, சிக்கிமை இணைத்து, பூட்டானைக் கட்டுப்படுத்துகிறது, இப்போது நேபாள இறையாண்மையை மிதித்து வருகிறது. இருப்பினும், சீனா மீட்புக்கு வந்து நேபாளம் அடுத்த சிக்கிம்குகளாக மாறாமல் பார்த்துக் கொள்ளும்.” என்றதொரு செய்தியை வழங்குவதாகவே சமீபத்திய எல்லை முரண்பாடு புலனாகிறது.தெற்காசியாவில் அதன் நோக்கங்களுக்கு ஏற்ப நேபாள வரலாற்றை சீனா தந்திரோபாயமாக பயன்படுத்துகிறது. சீன விவாதங்களில், நேபாளத்தின் வரலாற்று நிலையை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சீன சாம்ராஜ்யங்களுக்கு ஒரு “வசதியான நாடு” என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது.

இரண்டாவது, சமீபத்திய இந்தியாவின் சர்வதேச உறவுகள் சீனாவுக்கு எதிரான நாடுகளுடன் அமைவதும் சீனா - இந்தியா முரண்பாடு மோதலாய் பரிணமிக்க காரணமாகியுள்ளது. தைவானுடனான உறவில் இந்தியாவின் பாரம்பரிய நிலைப்பாட்டில் இருந்து மாறுதல் ஏற்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் தைவான் ஜனாதிபதி சாய் இங்-வென் இன் முதல் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை பெயரிட்ட பின்னர்,இந்திய அரசாங்கம் கடைசி நேரத்தில் பின்வாங்கியது. இது இந்திய - தைவான் உறவில் பெரும் ஏமாற்றத்திற்கு வழிவகுத்தது. சீனாவின் எதிர்வினை பற்றி கவலைப்படுவதாக பலர் சந்தேகித்தனர். எனிலும் சமீபத்தில் 2016 ஆம் ஆண்டில் முடிவுக்கு முரணாய்,தைவானுடன் இந்திய மற்றொரு அசாதாரண இராஜதந்திர நாடகத்தை உருவாக்கியது. ஓ் அசாதாரண நடவடிக்கையில், ஆளும் பாரதிய ஜனதாவைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் (மீனாட்சி லேக்கி மற்றும் ராகுல் கஸ்வான்) ஜனாதிபதி சாய் இங்-வென் பதவியேற்பு விழாவில் ஆன்லைனில் கலந்து கொண்டனர். இரு பாராளுமன்ற உறுப்பினர்களும் சாய்க்கு தனது இரண்டாவது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர். இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர, இந்தியா-தைபே சங்கத்தின் செயல் இயக்குநர் ஜெனரல் சோஹாங் சென், இந்த விழாவில் தைப்பேயில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தியதாக கூறப்படுகிறது. விழாவில்,ஒரு தனி வீடியோ செய்தியில்,“இந்தியாவிற்கும் தைவானுக்கும் இடையிலான விரிவான உறவுகளை தொடர்ந்து வலுப்படுத்துவதை” லெக்கி வலியுறுத்தினார்.

மூன்றாவது அவுஸ்ரேலியாவுடன் இந்தியா சமீபத்தில் நெருக்கமான உரையாடலை வளர்த்துள்ளது.மோடியும் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிசனும் தங்களது முதல் மெய்நிகர் இந்தியா-ஆஸ்திரேலியா உச்சி மாநாட்டை முடித்தனர். உச்சிமாநாடு முதலில் பிப்ரவரியில் திட்டமிடப்பட்டிருந்தாலும், ஆஸ்திரேலியாவின் காட்டுத்தீ மற்றும் பின்னர் தொற்றுநோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இரு நாடுகளுக்கிடையேயான மூலோபாய பிரச்சினைகள் குறித்த பல ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடன் இந்த சந்திப்பு வெற்றிகரமாக நடந்தது. கடந்த சில ஆண்டுகளில் இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இரு தலைவர்களும் 2009 இல் எட்டிய மூலோபாய கூட்டாண்மை நிலையை ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மைக்கு (சிஎஸ்பி) உயர்த்த முடிவு செய்தனர். கூட்டத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கை பல முக்கியமான செய்திகளுடன் கவனமாக சொல்லப்படுகிறது. கையெழுத்திடப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட ஒன்பது ஒப்பந்தங்களில், சில குறிப்பாக குறிப்பிடத்தக்கவை: இந்தோ-பசுபிக் கடற்படை ஒத்துழைப்புக்கான பகிரப்பட்ட பார்வைக்கான கூட்டு பிரகடனம் பரஸ்பர ஆயுத தளவாட ஆதரவு (எம்.எல்.எஸ்.ஏ) தொடர்பான ஏற்பாடு முக்கியமான மற்றும் மூலோபாய தாதுக்களின் சுரங்க மற்றும் செயலாக்க துறையில் ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பாதுகாப்பு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பு தொடர்பான ஏற்பாடு. கொந்தளிப்பான இந்தோ-பசுபிக் செல்லவும் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியாவின் இருதரப்பு பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஒத்துழைப்பை ஆழப்படுத்தும் திறன் இவை. மலேபார் கடற்படைப் பயிற்சிக்கு புதுடில்லி இறுதியாக ஆஸ்திரேலியாவை அழைக்கப்போவதாக இந்தியாவில் பத்திரிகை செய்திகள் வந்தன.ஆனால் அது உறுதிப்படுத்தப்படவில்லை.

நான்கு அமெரிக்க, இந்திய – சீன முரண்பாட்டில் கருத்து தெரிவித்த போதிலும் உறுதியான நிலைப்பட்டை தவிர்த்தே வருகிறது. ஜூன் 2 ம் தேதி, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் இடையே தொலைபேசி உரையாடல் நடைபெற்றது. வழக்கத்திற்கு மாறாக, அவர்களின் உரையாடலில் சீன-இந்திய எல்லை நிலைப்பாடு மற்றும் உலக சுகாதார அமைப்பை சீர்திருத்த வேண்டியதன் அவசியம் பற்றி விவாதித்ததாகக் கூறப்படுகிது. உலக சுகாதார அமைப்பு சீனாவுடன் மிகவும் வசதியானதாக இருப்பதாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இரு தலைவர்களுக்கிடையேயான உரையாடலுக்குப் பின்னர், சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜாவோ லிஜியன் “எந்த மூன்றாம் தரப்பினரும் தலையிட வேண்டிய அவசியமில்லை”என்று கூறினார். இது கொரோனாவிற்கு பின்னரான வல்லரசுப் போட்டி, என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இவ்அரசியல் பின்னனியில், இந்தியாவினை முடக்கி கொரோனாவிற்கு பின்னரான உலக ஒழுங்கில் சீனா தன் வல்லாதிக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கையாக இந்திய - சீன எல்லைப் பிரச்சினையை நகர்த்துகிறது. இரு அணுஆயுத நாடுகள் ஆயுத பயன்பாடின்றி தடிகளாலும் கற்களாலும் மோதுவதே இது ஆதிக்க ஆற்றலை தீர்மானிப்பதற்கான போட்டி என்பது தெளிவாக புரிகிறது. சீனாவிற்கு, இந்தியாவின் இராஜதந்திர நகர்வுகள் எவ்வாறு விளக்கப்படும் என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் இந்தியா மீதான இடைவிடாத சீனாவின் அழுத்தம் இந்தியாவை இன்னும் தூரம் தள்ளி அதன் பாதுகாப்பு கூட்டாண்மைகளை ஆழப்படுத்த வழிவகுக்கும் எனும் உரையாடலும் சர்வதேச பரப்பில் ஆழமாக காணப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. காலமே சீனாவின் அணுகுமுறையா? இந்தியாவின் அணுகுமுறையா? வெற்றி பெறப்போகிறது என்பதை உறுதிசெய்யும்.


பகுதி - 2

# நாடாளுமன்றத் தேர்தலும் தமிழினமும்

## நாடாளுமன்றம் செல்வதற்கு மக்களிடம் பணம் கேட்கும் அரசியல்வாதிகள்.

- மாசிலான் -







நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு இரு வாரம் கூடச்செல்லவில்லை அரசியல் கட்சிகள் தங்கள் கொள்கைகள் பற்றிப் பேசுவதைக் காட்டிலும் எதிர்க்கட்சிகளைப் பற்றி பேசுவதிலேயே அதிக கவனத்தைச் செலுத்துகின்றன.தாங்கள் என்ன செய்யப்போகிறோம், கடந்த காலங்களில் நாடாளுமன்றம் சென்று இன்னது செய்தோம் என்று கூற முடியாமல் எதிரணிகளை வசை பாடுவதிலேயே அதிகம் நேரத்தைச் செலவிடுகின்றனர்.இது ஒரு பக்கம் என்றால் தேர்தல் செலவுக்குப் பணம் தருமாறு இங்குள்ள மக்களையும், புலம்பெயர் மக்களையும் கேட்டு மன்றாடுகின்றனர். அரசியலுக்கு வருகிறார்கள் அரசியல் மக்களுக்காக என்று கூறுகிறார்கள். பின்னர் மக்களைக் கேட்கிறார்கள் தாங்கள் நாடாளுமனறத் தேர்தலைச் சந்திப்பதற்கு மக்களே பணம் தாருங்கள் என்று..இவ்வாறான நிலை அந்தக் காலத்தில் நடைபெற்றதா என்று திரும்பிப் பார்த்தால், போராட்ட காலத்திற்கு முன்னர் இவ்வாறான நிலை இருந்ததில்லை. அப்பொழுது புலம்பெயர்ந்தவர்கள் என்று பெரியளவில் யாரும் இருக்கவுமில்லை. ஆனால் இங்குள்ள மக்களிடம் கட்சிகள் காசு தாருங்கள் நாங்கள் அரசியல் செய்ய வேண்டும் என்று கேட்டதாக வரலாறும் இல்லை.ஆனால் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மக்கள் பணம் சேர்த்து மகிழ்ந்து வாங்கிக் கொடுத்ததும் உண்டு... கட்சிக்கென்று சிலர் காசு கொடுத்ததும் உண்டு தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை மக்கள் தாங்களாகவே ஒழுங்கு செய்ததும் உண்டு.ஆனால் கட்சிகள் மக்களிடம் பணம் தாருங்கள் என்று கேட்டதே இல்லை..இத்தனைக்கும் அப்பொழுது அரசியலில் இருந்தோரில் ஒருவர் இருவரைத் தவிரப் பெரிய வசதி படைத்தவர்கள் என்று யாரும் இருந்ததில்லை.

தந்தை செல்வா வழக்கறிஞராக உழைத்தார் . தேயிலைத் தோட்டம் ஒன்றையும் வாங்கியவர் ஆனால் அதைக் கட்சியின் வளர்ச்சிக்காக விற்றுத்தான் அரசியல் செய்தவர்.ஜி ஜி குற்றவியல் வழக்குகளில் ஏராளமாக உழைத்தவர்..டாக்டர் நாகநாதன் மருத்துவராக அதுவும் தனது உழைப்பின் மூலம் மிகக் கூடிய வருமான வரி கட்டிய மருத்துவர் என்று கூறப்பட்டவர். தனது உழைப்பு முழுவதையும் கட்சியின் வளர்ச்சிக்காகவே இழந்தவர். வன்னியசிங்கம்,அமிர்தலிங்கம்,கதிரவேலுப்பிள்ளை, துரைரத்தினம், இராசவரோதயம்,இராசமாணிக்கம்,இராசதுரை ஏகாம்பரம் போன்ற பலர் சாதாரணமானவர்களே. தமிழினத்திற்காகத் தமது உழைப்பைக் கட்சிக்குக் கொடுத்து அரசியலுக்கு வந்தவர்கள். வழக்கறிஞர் தொழிலில் நல்ல வருமானம் இருந்தும் கட்சிக்காக அதைச் செலவு செய்த பலர் அப்பொழுது இருந்துள்ளனர்.. அவர்களில் கதிரவேலுப்பிள்ளையும் ஒருவர். வாடகை வீட்டில் இருந்த அவர் ஒரு வீடு கட்டி வாழ்வோம் என்று நினைத்து வீடு கட்டி அதனை முற்றாக முடிக்காமலே வாழ்ந்து மறைந்தவர். இவ்வாறு அன்றைய காலத்தில் வாழ்ந்த அரசியல்வாதிகளில் தமது சொத்துகளைக் கட்சி வளர்ச்சிக்காகக் கொடுத்து நலிந்தவர்கள்பலர் இருந்துள்ளனர். அவர்கள் மக்களிடம் கையேந்தவில்லை.




ஆனால் இன்று கட்சிக்காரர்கள் தாங்கள் இனத்துக்காகப் பாடுபடப் போகிறார்களாம். அதனால் தங்களின் கட்சிகளுக்கு இங்குள்ள மக்களிடம் பணம் தருமாறு கேட்கிறார்கள். வெளிநாட்டில் வாழும் மக்களிடமும் கையேந்துகிறார்கள். இவர்கள் மக்களுக்காக அல்லது இனத்திற்காக உண்மையில் உழைப்பதற்குத் தானா வந்தவர்கள்.

வன்னியசிங்கத்தைப் பார்த்து மருத்துவர்கள் உங்களின் உடல் நிலை சரியாயில்லை , சில நாள்களுக்கு ஓய்வு எடுங்கள் என்று கூறியபோது எனக்கு உள்ள நோயிலும் பார்க்கத் தமிழ் இனத்துக்குள்ள நோய் தானே பெரிது. அதனால் தனக்கு ஓய்வு இப்போது வேண்டாம் என்று கூறிவிட்டுக் கட்சிப்பணி ஆற்றச் சென்றவர் அடுத்த வாரம் இயற்கை எய்தினார். ஆனால் வசதியாக இருந்து கொண்டு அரசியல் செய்ய வந்தவர்கள் தாங்கள் நாடாளுமன்றம் செல்வதற்கு மக்களிடம் பணம் கேட்கிறார்கள். விடுதலைப் புலிகள் போராட்டத்திற்காக மக்களிடம் பணம் கேட்டார்கள். அவர்களுக்கு எவ்வளவு பணம் தேவையாயிருந்திருக்கும். என்பதை நினைக்க முடியுமா ?ஆனால் அவர்கள் இத்தனைக்கும் மக்களிடம் கடனாகத் தான் பணம் கேட்டார்கள்..கடனாகவா கேட்கிறார்கள் இவர்கள் திருப்பிக் கொடுப்பார்களா என்று பேசியவர்களும் உண்டு. ஆனால் அவர்கள் திருப்பிக் கொடுத்தார்கள்.. ஆனால் தாங்கள் நாடாளுமன்றம் சென்று குளிரூட்டிகளின் கீழ் இருப்பதற்கு மக்களிடம் பணம் கேட்கிறார்கள், இன்றைய அரசியல்வாதிகள். .நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொழுத்த சம்பளம் உண்டு. அதைவிடப் போக்கு வரத்து இலவசம்,தொலை பேசி இலவசம்,கொழும்பில் தங்கி இருக்கும் வசதி, மலிவான விலையில் உணவு..இத்தனையுடன் சம்பளத்திற்கும் மேலதிகமாக நாடாளுமன்றம் சென்றால் கொடுப்பனவு. இவ்வளவும் பெறுவதற்காக மக்கள் தங்களுக்குப் பணம் தருமாறு பிச்சாபாத்திரம் ஏந்துகிறார்கள் கட்சியினர். மக்கள் பணம் கொடுத்தால் அதை இவர்கள் திருப்பிக் கொடுப்பார்களா ?நாடாளுமன்றம் செல்லப் பயணம் இலவசம் , நாடாளுமன்றத்தில் மலிவு விலை உணவு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க விடுதி என்று இருக்கும்போது தமது கொழுத்த சம்பளத்தில் இவர்கள் கணிசமான தொகையை துன்பப் பட்டுக்கொண்டிருக்கும் முன்னாள் போராளிகளுக்கு வழங்கியிரக்கலாம்? ஆனால் வழங்கவில்லை. தாங்கள் நாடாளுமன்றம் போவதற்குப் பணம் கேட்கும் இவர்கள் இத்தனை ஆண்டுகளாக உடலுறுப்புகளை இழந்து வாழும் எம்மக்களுக்காக யாரிடமாவது பணம் கேட்டதுண்டா?போராட்டத்தில் தமது அனைத்தையுமிழந்து வாழும் முன்னாள் போராளிகளுக்காக எப்போதாவது "மக்களே பணம் தாருங்கள்" என்று கேட்டதுண்டா?. இல்லையே!

இப்பொழுது தாங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு வசதியாக வாழ்வதற்கு "மக்களே காசு தாருங்கள்" என்று கேட்கிறார்கள். மக்களே அவர்களுக்குக் கொடுப்பதை விடத் தமிழினத்தின் இன்னல் தீர்க்கத் தமது வாழ்வை இழந்து நிற்கும் மக்களுக்கு உங்களால் ஆனதைக் கொடுங்கள். அரசியல்வாதிகளுக்குகொடுப்பது விழலுக்குஇறைத்த நீராகும் என்பதே உண்மை.




# ஒன்றுக்கு முன்னால் பூச்சியம் வந்தால்? – கருணா படலம்

நாட்டைப் பாதுகாக்க உதவியவர் என்று கிரீடம் வைத்துப் போற்றப்பட்ட கருணாவை இப்போது துரோகி என்று பிக்குமார் தூற்றத் தொடங்கி இருக்கின்றனர்.
விடுதலைப் புலிகளிடமிருந்து அவர்களைப் பிரித்தனர்.
அவரிடமிருந்து விடுதலைப் புலிகள் பற்றிய இரகசியங்களை எடுத்துக் கொண்டனர். தமது இராணுவத் தேவைகளுக்காக அவரை நன்கு பாதுகாத்துக் கொண்டனர். அவருக்கு வேண்டிய எல்லா வசதி வாய்ப்புகளையும் கொடுத்துத் தமிழைப் பற்றியோ அல்லது தமிழரைப் பற்றியோ அல்லது தமிழ்த்தேசியத்தைப் பற்றியோ அவரைச் சிந்திக்க வைக்காது ஒரு சொகுசு வாழ்க்கைக்குள் அவரைத் தள்ளிவிட்டனர். அவருக்கு எல்லையற்ற கடனைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகப் பல வங்கிக் கடன் அட்டைகளை வழங்கியிருந்தனர். மாதர்கள் புடை சூழ மோக வாழ்க்கையில் பல நட்சத்திர ஹோட்டல்களை வலம் வந்து கொண்டிருந்தவருக்கு அவர் வாயால் வந்ததே வினை..!

தவளைக்கு மாரிகாலம் வருவதைப்போல. அரசியல்வாதிகளுக்குத் தேர்தல் காலம் வரும். அப்படி அரசியல்வாதி யாகிவிட்ட கருணாவுக்கு இத்தேர்தல் காலம் மாரிகாலமாகிவிட்டது. மாரித் தவளைபோல் கத்தத் தொடங்கியதன் விளைவு அவரைத் தேடி அழிவு வந்துவிட்டதோ? அவரால் ராசபக்ஷ களுக்குப் பெருந் தலையிடி தொடங்கிவிட்டது. தென்னிலங்கை அரசியல்வாதிகளும், பிக்கு மார்களும் ராஜபக்ஷகளின் தலைகளை உருட்டத் தொடங்கிவிட்டனர். பிக்குமார்களின் தொல்லை தாங்க முடியாது தடுமாறுகிறார்களாம் ராஜபக்ஷகள். அவர்களுக்குத் தற்போதுள்ள பயம் தொடர்ந்து கருணா வாய் திறந்து என்ன.. என்னத்தையெல்லாம் உளறப்போகிறாரோ தெரியவில்லை, என்பதே!

கருணா விடுதலைப் புலிகளிடமிருந்து விலக்கப்பட்டபோது, ஒரு தமிழீழ விடுதலைப் புலி இயக்க முக்கியஸ்தர் சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. "ஒன்றுக்குப் பின்னால் வருவது தான் பூச்சியத்துக்கு மதிப்பு. ஆனால் பூச்சியம் அந்த ஒன்றுக்கு முன் வருமாயின் அந்தப் பூச்சியத்துக்கு மதிப்பே கிடையாது. கருணா அந்த ஒன்றுக்கு முன்னால் வர ஆசைப்பட்டுவிட்டார். அது தான்.." என்று குறிப்பிட்டிருந்தார்.

தற்போது கருணா அதே தவறை விட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். கருணா மஹிந்தா என்ற அந்த ஒன்றுக்கு முன்னால் வருவதற்கு ஆசைப்பட்டுவிட்டாரோ? என்று சந்தேகப்படுகிறேன்.

கொலைகளைச் செய்தேன் என்ற ஒப்புதல் வாக்கு மூலத்தின் மூலம் யாரைத் தேற்ற முனைகிறார்? எந்தப் புண்ணுக்கு மருந்து போட எண்ணுகிறார்? என்ன இராஜதந்திரமோ? என்ன அரசியல் சூட்சுமமோ? கருணாவுக்குத்தான் வெளிச்சம்.
யுத்தகாலத்தில், அவர் அரசு தரப்புச் சாட்சியாக மாறிவிட்டபோது, 3000 இராணுவத்தினரை ஒரே நாளில் கொன்றவருக்குத் தாம் ஆசி வழங்குகிறோம் என்று அறியாது, மஹாசங்கத்தினர் அவரை அழைத்துப் பிரித் நூலையும் அவர் கையில் கட்டி அவரை ஆசிர்வதித்தனர். அப்படித் தாம் அரவணைத்தவரை, தமது அன்புக்குப் பாத்தரமானவரைக் கைது செய் எனத் தற்போது கோஷம் போடுகின்றனர். என்ன காரணம்?



கருணாவைக் கைது செய்தாலே ராஜபக்ஷக்கள் துணிவுள்ளவர்கள் என ஐக்கிய பிக்குகள் முன்னணி தெரிவித்திருக்கிறது. எனவே கருணாவின் தற்போதைய நிலை என்ன? கைது செய்யப்படுவாரா? கருணா விவகாரம் இப்படி இருக்க...ஞானசாரர் பற்றிய நகைப்புக்குரிய கதை ஒன்றையும் கேள்விப்பட்டேன்.

## ஞானசாரருக்கு வந்த ஞானம்

வீட்டினை உருவாக்கிய புலிகள் அதனை ஆதரிப்பது அதிசயமல்ல. கூட்டமைப்புடன் முன்னாள் போராளிகள் இணைவைப் பற்றி இப்படிச் சொல்லி இருக்கிறார் ஞானசாரதேரர். வீட்டினை உருவாக்கிய புலிகளைத்தான் கொன்று விட்டோம் என்று இலங்கை ஜனாதிபதி உறுதியாகச் சொல்லுகிறார். பின்பு இலங்கையில் எங்கே விடுதலைப் புலிகள் இருக்கிறார்கள், வீட்டினை ஆதரிக்க?
முன்னாள் போராளிகளாக இருந்தவர்களில் சிலர் தனிப்பட்ட நலன்களுக்காக வீட்டுக்கு ஆதரவை வழங்குகின்றனர். அதற்காக முன்னாள் போராளிகள் அனைவரும் வீட்டுக்கு ஆதரவு கொடுப்பதாக எண்ணுவது முட்டாள்தனமல்லவா? ஞானசாரருக்கு வந்த ஞானம் அப்படி இருக்கிறதென்றால்.. வரலாற்றுச் சிறப்பு மிக்க லங்காராம விகாராதிபதி என்ன சொல்லுகிறார்.. என்றால்..!

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தூற்றிக் கொள்ளும் அரசியல் மேடைகளுக்கு அப்பால், தமது கொள்கையைச் சரியாகவும். அச்சமற்றும் முன்வைத்த ஒரேயொரு தலைவர் கோத்தாபயவே.. கடந்த சில மாதங்களில் சரியான திசையில் நாட்டை கொண்டு சென்ற ஜனாதிபதி எனவும், மஹாசங்கத்தினரதும், மக்களினதும் நம்பிக்கைக்குள்ளாகி இருக்கிறார் எனவும் லங்காராம விகாராதிபதி சங்கைக்குரிய ரலபனாவே தம்ம ஜோதி தேரர் தெரிவித்திருக்கிறார்.

இப்படித் தேரர்களுக்கு வந்திருக்கும் ஞானத்தின் விளைவு என்னவாக இருக்குமோ?

# லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனாவின்
# இனப்பிரச்சினைக்கான தீர்வு!

- சிலம்பு -



இலங்கைத் தீவின் அரசியல் என்பது இனப்பிரச்சினையை மையமாகக் கொண்டே அந்நியராட்சிக்காலத்திலிருந்து நடைபெற்று வருகிறது.தங்களின் நிர்வாக வசதிக்காகப் பிரிந்திருந்த தமிழ் சிங்கள ஆட்சி அலகுகளை, வெள்ளையர்கள் 1833 இல் ஒன்றாக்கியதன் விளைவே இந்த இனப்பிரச்சினைக்கான காரணியாகும்.ஆனால் சிங்களத்துத் தலைவர்கள் இதனைக் கவனிக்காது ஒன்றாக இருந்த இலங்கையில் தமிழர்களே பிரச்சனைகளை வளர்த்து வருவதாகக் கூறி அரசியல் செய்து வருகின்றனர். 1948 இல் அந்நியராட்சி முடிவுக்கு வந்ததன் பின்னர் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டதால் தீவு இன முரண்பாட்டுக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது. தங்களின் உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்பட்டபோது தான் தமிழ் மக்கள் தமது இருப்பைக் காப்பாற்றிக் கொள்ள சமஷ்டி ஆட்சியை வலியுறுத்தத் தொடங்கினர்.சமஷ்டி என்பது ஒற்றுமைக்கான ஆட்சியமைப்பே ஆகும் அதனாற்றான் பண்டாரநாயக்க 1925 இலேயே சமஷ்டி ஆட்சி முறையே இலங்கைக்கு ஏற்ற ஆட்சி முறை என்று கூறினார். அப்பொழுது தமிழர் தரப்பிலிருந்த இவ்வாறான சமஷ்டி அமைப்புக்கான குரல் எழவில்லை. அதனால் சமஷ்டி என்பது பிரிவினை என்று எவரும் அப்பொழுது கூறவில்லை .ஆனால் தந்தை செல்வா இலங்கையில் தமிழினம் சுய கௌரவத்துடன் வாழச் சமஷ்டியே ஏற்ற ஆட்சி முறை என்றதும், சமஷ்டி பிரிவினை வாதம் என்றாகி தந்தை செல்வாவும் இனவாதியாக அடையாளம் காணப்பட்டார். இது தான் இன்று வரை உள்ள அரசியல் நிலைமையாகும்.

இந்த நிலையில் தான் முன்னாள் அமைச்சரான லக்ஸ்மன் யாப்பா அபேயவர்த்தனா ஒரு கருத்தை முன்வைத்துள்ளார்.தமிழ் மக்களின் தீர்வு அரசியல் நோக்கங்களைப் பின்னணியாகக் கொண்டிராத வகையில் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.தமிழ் மக்களின் தீர்வு என்பதன் பொருள் என்ன?அவர்களுக்கு உள்ள பிரச்சினை அரசியலால் ஏற்பட்டதுதானே! அரசியலால் வந்த பிரச்சனையை அரசியல் நோக்கங்களைக் கொண்டிராத பின்னணி இல்லாமல் எவ்வாறு தீர்க்க முடியும்?..இலங்கையில் இனங்களுக்கிடையில் இருப்பது முற்றிலும் அரசியலால் ஏற்பட்ட பிரச்சினையே ஆகும்.

.சிங்களமக்களின் இரு பெரும் கட்சிகளும் இன வேற்றுமைகளை மக்களின் மனங்களில் வளர்த்துத்தான் மாறி மாறி ஆட்சியைக் கைப்பற்றினர்.




இனவாத அரசியல் கருத்துகளைக் கூறிய தற்போதைய ஆட்சியாளர்கள் தான் அரசியல் நோக்கங்களைக் கொண்டிராத வகையில் தீர்வு வழங்கப்படும் என்று கூறுவதாக யாப்பா சொல்கிறார். இவ்வாறு கூறுவதும் முற்றாக ஒருவகையில் இனப்பினச்சினையை அரசியலாக்கும் இன்னொரு முயற்சியே ஆகும்.

இன முரண்பாடுகள் அதிகரித்து வந்த நேரத்தில் தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினையை முதன்மைப்படுத்தியபோது அதை இனவாதம் என்று ஒரு பகுதியினர் கூறிக்கொண்டிருக்க அன்றைய இடதுசாரிகள் இங்கிருப்பது பொருளாதாரப் பிரச்சினையே என்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தினால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்றும் கூறினார்கள்.ஒருவன் வயிற்றில் பிரச்சினை என்று கூறி வைத்தியரை நாடியபொழுது "இந்த மருந்தை உட்கொண்டால் வயிற்றுக் குழப்பம் தீர்ந்துவிடும்" என்று ஒரு மருந்தைக் கொடுத்தாராம். அதை அந்த நோயாளி உட்கொண்ட சிறிது நேரத்தில் அவருக்கு வாந்தி பேதி அதிகரித்து இறந்தே போனாராம். அதனை வைத்தியரிடம் சென்று கூறியபோது வைத்தியர் சொன்னாராம் "ஆள் போனால் என்ன! வயிறு சுத்தமாகி விட்டதுதானே?" என்று.

இவ்வாறுதான் தமிழினத்தின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் காலத்தில் தமிழினமே இந்த நாட்டில் இருக்கமாட்டாது என்றும் கூறினார் எமது விகடகவி திருநாவுக்கரசர். அதையே தான் இப்பொழுதும் யாப்பா அபேவர்த்தனா கூறியிருக்கிறார்.தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியது அவசியம்.அது அரசாங்கத்தினதும் பொறுப்பாகும் என்று கூறியவர் அடுத்துக் கூறுகிறார் அரசியமைப்புத் திருத்தம் ஊடாகத் தான் தீர்வு காண முடியும் என்பது பொருத்தமற்றது .அரசியலமைப்பின் ஊடாக ஒரு தரப்பினருக்குத் தீர்வு வழங்கும் போது பிறிதொரு தரப்பினர் பாதிக்கப்படுவார்கள் என்கிறார் அவர்.ஒருவன் உணவு உண்டுகொண்டிருக்கும்போழுது அதில் பாதியையா அல்லது சிறு பகுதியையா பறித்துத் தரச் சொல்கிறார்கள்?.இல்லையே . இங்கு நீ நன்றாக வாழு. அதேபோல் என்னையும் வாழ விடு என்பது தானே சமஷ்டியின் அடிப்படையே.இவ்வாறு வாழு, வாழ விடு என்றால் அது எவ்வாறு ஒருவருக்கு வழங்குவதால் மற்றவர் பாதிக்கப்படுவார்? என்று கேட்க முடிகிறது

சமஷ்டி ஆட்சி முறை என்றால் பிரிவினை என்று கூறும் அரசியல்வாதிகள் அவ்வாறு சமஷ்டி ஆட்சி நடக்கும் நாடுகள் பிரிந்து இருக்கின்றன என்று ஒரு நாட்டையாவது அடையாளம் காட்ட முடியுமா.?அமெரிக்காவில் இனப்பிரச்சினை இல்லை, ஆனால் நிற வெறி ப்பிரச்சினை இருக்கிறது! அந்த நாட்டில் சமஷ்டி ஆட்சி தானே இருக்கிறது அது பிரிந்தா கிடக்கிறது?. அது உலகின் மிகப் பெரிய வல்லரசாகவல்லவா திகழ்கிறது. முன்னர் சோவியத் ஒன்றியம் பல இன மக்களின் ஒன்றிணைந்த சமஷ்டியாகத் தானே இருந்தது.சமஷ்டி ஆட்சி அமைப்புக்கு எடுத்துக்காட்டாகவே அது இருந்துள்ளது. அமெரிக்காவுக்குச் சமமான வல்லரசாகத்தான் திகழ்ந்தது.விண்வெளி ஆய்வில் முன்னுக்கு நின்றது , அந்த நாட்டின் ஒற்றுமையினால் தானே. அந்த ஒற்றுமைக்கு மூல காரணம் சமஷ்டி அரசியல் அமைப்பு தான். இவ்வாறு உலகத்தில் ஏராளமான சமஷ்டி அமைப்புகள் உள்ள நாடுகள் இருக்கின்றன. ஆனால் சமஷ்டி என்றால் பிரிவினை என்று கூறி மக்களை ஏமாற்றி இன முரண்பாடுகளால் ஆட்சியைக் கைப்பற்றும் குறுகிய எண்ணம் கொண்ட அரசியல்வாதிகள் இலங்கையில் தான் இருக்கிறார்கள். இலங்கையின் அரசியல் அது தான். சிங்கள பௌத்த மேலாதிக்கச் சிந்தனையின் வெளிப்பாடுதான் சமஸ்டி என்றால் பிரிவினை, வடக்குக் கிழக்குச் சேர்த்தல் என்றால் பிரிவினை என்பதாகும்.

மகிந்த ராஜபக்சா கூடக் கூறுகிறார் சமஷ்டி என்பதுவும் பிரிவினை தான் வடக்குக் கிழக்கு இணைப்பு என்று கேட்பதுவும் பிரிவினை தான் என்று. அதே கட்சியின் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனா இப்பொழுது அரசியல் யாப்பில் திருத்தம் கொண்டு வராது தீர்வு காணப்படும் என்று கூறுகிறார் .இது சாத்தியமா?பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் நாட்டில் சமாதான வாழ்வு இருக்க வேண்டும்.இந்தச் சின்னஞ் சிறு நாட்டிற்கு இத்தனை இலட்சம் படையினர் தேவையா?அவர்களுக்காகும் செலவை நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினால் நாடு உண்மையில் இந்து சமுத்திரத்தில் ஒரு முத்தாகத் தானே இருந்திருக்கும்.


பண்டாரநாயக்க பிரதமராக இருந்தபோது கூறினார் இந்தச் சின்னம் சிறிய நாட்டிற்கு இராணுவம் எதற்காக என்று. ஆனால் இன்று எத்தனை பல லட்சம் படையினர் உள்ளனர்.இது எதனால் ஏற்பட்டது.பண்டாரநாயக்க 1925 இல் கூறியவாறு சமஷ்டி அமைப்பை ஏற்படுத்தியிருந்தால் இன்னாட்டில் சமாதானமும், வளர்ச்சியும் ஏற்பட்டிருக்கும். ஆனால் பதவியை எவ்வாறு அடைவது? குறுக்கு வழி என்ன என்பதில் ஏற்பட்ட போட்டி இன்று நாட்டையே அதல பாதாளத்திற்குத் தள்ளிவிட்டது. இதனை உணராது யாப்பா போன்ற அரசியல்வாதிகள் அரசியல் யாப்பு மூலம் நல்லதொரு தீர்வைக் கொடுக்க முடியாது என்று கூறுவது எத்தனை காலம் தாக்குப் பிடிக்குமோ தெரியாது.

# செயற்கைத் தீவுகளை உருவாக்குவதன் மூலம் சீனா வைக்கும் பொறி

## சிக்கியது தப்பியது யார்?

மலாக்கா நீரிணை (**Strait of Malacca**) மலேசியத் தீபகற்பத்துக்கும் இந்தோனேசியாவின் சுமத்திராத் தீவுகளுக்கிடையே உள்ள 805 கி.மீ நீளமான நீரிணையையே மலாக்கா நீரிணை எனக் குறிப்பிடுகின்றனர். உலகின் மிக முக்கிய கப்பற்பாதையாக உள்ள இந்த நீரிணையின் முக்கியத்துவம் சுயஸ் கால்வாய், பனாமாக் கால்வாய் ஆகியவற்றுக்கு ஒப்பானது. இந்த நீரிணை பசுபிக் பெருங்கடலையும், இந்தியப் பெருங்கடலையும் இணைப்பதாக அமைந்துள்ளது. ஆண்டுதோறும் 50,000 கடற்கலங்கள் இந்நீரிணையினூடாகப் பயணிப்பதாகக் கூறப்படுகிறது. மலேசியாவின் மலாக்கா மாகாணத்தின் பெயரை இந்நீரிணை பெற்றுள்ளது. இந்நீரிணை இந்தியா, சீனா, ஜப்பான், தைவான. தென் கொரியா ஆகிய ஆசியாவின் பெரும் பொருளாதார நாடுகளை ஒன்றிணைக்கிறது.

நட்டுனா தீவு (**Natuna Island**) என்பது மலேசியாவிற்கு இடையில் உள்ளது. அதாவது மலேசியா - சபா, சரபா மாநிலங்கள் உள்ளடங்கலாக உள்ள பகுதி, குடா போன்ற வடிவத்தை உருவாக்கும். அதன் நடுவே உள்ள தீவே நட்டுனா தீவு எனப்படுகிறது.. இரண்டு பக்கங்களிலும் மலேசியா இருப்பதால், அது முழுவதுமே மலேசியாவின் கட்டுப்பாட்டுக்குள் வரும். ஆனால், இதனைத் தற்போது 1500 கிலோ மீற்றர் தொலைவுக்கு அப்பால் உள்ள சீனா சொந்தங் கொண்டாட நினைக்கிறது. ஏனெனில், சீனாவுக்கான கச்சாய் எண்ணெயில் **80%** இந்த மலாக்கா நீரிணையின் வழியாகவே செல்கிறது. உலகளவில் **25%** வாணிபம் என்பது இந்த நீரிணை வழியாகத்தான் நடைபெறுகிறது. மலேசியா அதிகளவு செல்வம் கொழிக்கும் நாடாக மாறுவதற்கு இந்த நீரிணையும் ஒரு காரணம். இந்த நீரிணையின் பெரும் பகுதி மலேசியாவின் கட்டுப்பாட்டிலும், கொஞ்சம் சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டிலும் இருக்கிறது. சில வேளைகளில் மலேசியா இந்த நீரிணை வழியாக ஏனைய நாடுகளின் போக்கு வரத்துக்களை நிறுத்தப் போவதாக அறிவித்து வந்துள்ளது.




1947ஆம் ஆண்டு சீனா, தென்சீனக் கடல்பகுதி தொடர்பான வரைபடத்தை உருவாக்கியது. அதில் 11 சிறு கோடுகள் இடப்பட்டு பகுதிகள் குறிக்கப்பட்டன. 1950 களில் 9 கோடுகளாகக் குறைக்கப்பட்டன. இந்த 9 சிறு கோடுகள் இடப்பட்ட பகுதியை நோக்கும் போது **80%** தென் சீனக் கடலை சீனா தனதாக்கிக் கொண்டது எனலாம். இப்படியாகச் சீனா ஆக்கிரமிக்கும் கடல் பகுதிகளில் செயற்கைத் தீவுகளை உருவாக்கி வருகிறது. கடந்த 11 வருடங்களில் 200 செயற்கைத்திடல்களை உருவாக்கும் கப்பல்களைச் (**Dredging Ship**) சீனா வாங்கியது. இவற்றின் மூலம் சீனா நொடிக்கு நொடி புதிய தீவுகளை அல்லது தீவுக் கூட்டங்களை உருவாக்கி வருகிறது என்றே கூறலாம்.

செயற்கைத் தீவுகளை எவ்வாறு உருவாக்குகிறார்கள்? என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். செயற்கைத் திடல்களை உருவாக்கும் கப்பல்களைக் கடலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியில் கொண்டுபோய் நிறுத்துவார்கள். அது ஓர் இடத்திலுள்ள மணலை உறுஞ்சி இன்னோர் இடத்தில் விசிறும். அதனால் ஒரு பகுதி பள்ளமாகவும் இன்னோர் பகுதி மண்திடலும் உருவாகும். தொடர்ந்து அப்படிச் செய்வதனால் தீவுகள் போன்று உருவாகிறது. உலகளவில்

எழுத்துருவாக்கம் : ப. ராஜ்குலன்

செயற்கைத் தீவுகளை உருவாக்கும் கப்பல்களை அதிகமாக வைத்திருக்கும் நாடும் சீனா தான். இன்னும் 10 வருடங்களில் அதிகளவான செயற்கைத்தீவுகளை உருவாக்கப் போவதாகச் சீனா அறிவித்துள்ளது.

ஏன் இந்த செயற்கைத் தீவுகளை உருவாக்குகிறார்கள்? கடல் எல்லைகளை விரிவுபடுத்துவதே இத் திட்டம். கடந்த இதழில் கடல் எல்லைகளைப் பற்றிப் பார்த்தோம். ஒருநாட்டின் கடல் எல்லை 200 கடல்மைல். அப்படியென்றால் உருவாக்கப்படும் தீவுகளில் இருந்து 200 கடல்மைல் வரை சீனாவில் எல்லையே!.. இப்போது தெரிந்திருப்பீர்கள், சீனா ஏன் செயற்கைத் தீவுகளை உருவாக்குவதில் அதிகம் முனைப்புக் கொண்டிருக்கிறது என்று..


இதே வேளை, சில தீவுக் கூட்டங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். பாரசெல் தீவுகள் (**Paracel Islands**) மற்றும் ஸ்பிராற்லி தீவுகள் (**Spratly Island**). பாரசெல் தீவுகளை சீனா, தைவான், வியட்நாம் போன்ற நாடுக சொந்தம் கொண்டாடுகின்றன. ஸ்பிராற்லி தீவுகளை சீனா, மலேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், தைவான் போன்ற நாடுகள் சொந்தம் கொண்டாகின்றன. இந்த ஸ்பிராற்லி தீவுக் கூட்டத்துக்கு அருகில் தான் முன் சொல்லப்பட்ட நட்டுனா தீவு இருக்கிறது.

ஒரு வேளை இந்த நட்டுனா தீவு சீனர்களின் கைகளிற்குச் சென்றுவிட்டால், மலேசியாவின் நடுப்பகுதியிலிருந்தே அவர்களால் மலேசியாவை இயக்க அல்லது கட்டுப்படுத்த முடியும்.




**Dredging Ship**

**செயற்கைத்தீவு உருவாக்கப்படும் விதம்**




மலாக்கா நீரிணையை மலேசியா மூடிவிட்டால், சீனா தாம் மலேசியாவின் எதிரியாக மாறிவிடுவோம் எனப் பயமுறுத்துவார்கள்.
சீனா - ரஷ்யா தொடர்பான வேலைத்திட்டங்கள் பற்றிக் கடந்த இதழில் அலசினோம். ஆம், சீனாவின் அதிகப்படியான முதலீடுகளுடன் கூடிய வேலைத்திட்டங்கள் ரஷ்யாவில்தான் உள்ளது. அதற்கு அடுத்த படியாக மலேசியாவில் தான் பெரியளவில் முதலீடுகளைப் போட்டுள்ளார்கள். இப்பொழுது உங்களுக்கு புரிந்திருக்கும், சீனாவிற்கு மலேசியா எந்தளவு முக்கியத்துவம் வாய்ந்த பகுதி என்று..
கடந்த ஆண்டுகளில் மலேசியாவில் பல அரசியல் நெருக்கடிகள் உருவெடுத்தது. கடந்த 2018ஆம் ஆண்டு அந்நாட்டில் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்திற்கு முக்கிய காரணமாக அமைந்தது, முன்னாள் பிரதமர் நஜீப் துன் ரசாக் அவர்களின் வண் எம்.டி.பி **(1 MDB)** ஊழல்.




மகாதீர் முகம்மட் அவர்கள் மறுபடியும் பிரதமராக ஆட்சிக்கு வருவதற்கான சூழலையும் அது உருவாக்கியது எனலாம். 100 கோடி அமெரிக்க டொலர் பணத்தை அவர்களின் சொந்த செலவுக்காகப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றசாட்டும் நஜீப் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கு மேலும் வலுச் சேர்த்தது. அப்பணத்தை அவர் யாரோ தனக்குப் பரிசாகத் தந்தார்கள் என்றுகூடச் சொல்லி இருக்கிறார்.
மகாதீர் முகம்மட் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஒரே பட்டை - ஒரே பாதை (முநெ டீநடவ முநெ சுழயன (முடீமுசு)) திட்டத்தில் கணிசமான அளவு மட்டுப்படுத்தினார். 688 கிலோமீற்றர் நீளமான கிழக்கு கடற்கரை தொடரூந்து இணைப்பு வழி வேலைத்திட்டம் **(East Coast Rail Link Project)**, சுமார் 25 பில்லியன் செலவில் அந்த ஒரு வேலைத் திட்டத்திற்காகவே ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வேலை திட்டத்துடன் சேர்த்து மலேசியாவிற்கு 100 பில்லியனுக்கு அதிகமாக கடனாகச் செலுத்த வேண்டியிருந்தது.

மகாதீர் முஹம்மட் - சீன அரசுடன் பேச்சுக்களை நடத்தி கிட்டத்தட்ட 12 - 16 பில்லியனுக்கு இந்த வேலைத் திட்டத்தை முடிப்பதற்கு ஒப்புக் கொண்டார்கள். இந்த ஒப்புதலுக்குப் பின்னாலும் ஒரு காரணம் உண்டு. நஜீப் துன் ரசாக்கின் ஊழல் நடந்ததாக மேலே பார்த்த வண் எம்.டி.பி **(1 MDB)** வேலைத் திட்டத்தின் சொத்துக்கள் யாவும் வாங்குதற்கு ஆழில்லாமல் ஊழல் சொத்தாக, தேடுவாரற்றுக் கிடந்தன. அதையெல்லாம் சீன அரசாங்கமே அதன் பினாமிகள் ஊடாக வாங்கிக் குவித்தது. இதனூடாக சீனா நஜீப்பை காப்பாற்றியதுடன் மட்டுமல்லாது ஆளும் அரசாங்கத்தையும் காப்பாற்றியது. ஏன் இப்படிப் பணத்தை அங்கேயே கொட்டுகிறார்கள் என்றால், எல்லாமே ஒரே பட்டை ஒரே பாதை (முநெ டீநடவ முநெ சுழயன (முடீமுசு)) என்ற மலாக்கா நீரிணை ஊடாகச் செல்லும் பட்டுப்பாதைத் திட்டத்துக்காகவே!
இருப்பினும் சீனாவிற்குத் தெரியும், மலேசியா எப்போது வேண்டுமோனாலும் காலை வாரலாம். அப்படி அது மலாக்கா நீரிணையை மூடிவிட்டால், அதன் வழியாக வரும் 80மூ கச்சாய் எண்ணெய் சீனாவிற்குக் கிடைக்காது. இதற்கான மாற்று வழிகளை அவஉகள் ஆராய்ந்தார்கள். அந்த முயற்சியின் தொடக்கமாக இந்தோனேசியாவின் சுண்டா **(Sunda Strait)**.

நீரிணையினூடாகக் கப்பல்களை இயக்கிப்பார்த்தார்கள். அது அவ்வளவாக அவர்களுக்குக் கைகொடுக்கவில்லை. சுண்டா நீரிணை என்பது மிகவும் குறுகிய பகுதி. அதனால் பெரிய கப்பல்களைச் செலுத்தமுடியாது. ஆகவே, அவர்களின் பார்வை தாய்லாந்தின் பக்கம் சென்றது.

தாய்லாந்தின் கிரா கால்வாய் அல்லது கிரா இஸ்துமஸ் கால்வாய் என்றும் அழைக்கப்படும் தாய் கால்வாய், தாய்லாந்து வளைகுடாவைத் தெற்கு தாய்லாந்தில் உள்ள கிரா இஸ்த்மஸ் வழியாக அந்தமான் கடலுடன் இணைக்கும் ஒரு கால்வாய்க்கான திட்டங்களைக் குறிக்கிறது. அத்தகைய கால்வாய் பனாமா கால்வாய் மற்றும் சூயஸ் கால்வாய் போன்ற பிராந்தியத்தில் போக்குவரத்தை மேம்படுத்தும் என்று கருதப்படுகிறது. இந்தத் திட்டமானது, தாய்லாந்தின் ஒடுங்கிய நிலப்பகுதியான கிராவைக் கால்வாயாக மாற்றுவதாகும். இந்த கால்வாய், மலாக்கா நீரிணை (ஜலசந்தி) வழியாக ஜப்பான் மற்றும் சீனாவுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கான போக்குவரத்தை 1,200 கி.மீ. வரை குறைக்கும்.

சீனா தனது 21 ஆம் நூற்றாண்டின் கடல்வழி பட்டுச் சாலையின் ஒரு பகுதியாக இதைக் குறிப்பிடுகிறது. இந்தக் கால்வாய்க்கான திட்டமானது, 102 கிலோமீட்டர் நீளம், 400 மீட்டர் அகலம் மற்றும் 25 மீட்டர் ஆழம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கால்வாய்க்கான திட்டங்கள் பல்வேறு காலங்களில் விவாதிக்கப்பட்டு ஆராயப்பட்டன, ஆனால் சீனாவின் ஆசை வார்த்தைகளுக்கு தாய்லாந்து மடியவில்லை. அதனால் சீனா மாற்று வழியைத் தேடியது. அது தற்போது பாகிஸ்தானைத் தேர்ந்தெடுத்துள்ளது. ஆகவே, பாகிஸ்தானின் குவாடர் **(Gwadar Port)** துறைமுகத்தைச் சுற்றிவளைக்கத் திட்டமிட்டுள்ளது. பாகிஸ்தான் வழியாகக் குழாய் மூலம் எரிபொருளைச் சீனாவிற்கு எடுத்துச் செல்வதே அவர்கள் திட்டம். மலாக்கா நீரிணை எப்போது வேண்டுமானாலும் மூடப்படலாம். ஆதலால் பாகிஸ்தானே உதவக் கூதுடியவர்களாகத் தென்படுகிறார்கள். அதற்காக எவ்வளவு பண உதவி வேண்டுமானாலும் செய்வதற்கு முன்வந்தது. கொரோனாவின் கோரத் தாண்டவத்தில் தடுமாறிப் போயுள்ள பாகிஸ்தானை எப்படியாவது தம் பிடிக்குள் கொண்டுவர எடுத்த முயற்சின் தொடக்கமாக அவஉகளுக்குக் கடன்மேல் கடன் கொடுத்து பாகிஸ்தானைத் தள்ளாட வைத்துள்ளது. அதனால் பாகிஸ்தானியர்களின் வருமானத்தில் **70%** சீனாவிற்கு வட்டிகட்டுவதற்கே செல்கிறது. அதனால் பாகிஸ்தான் உலகநாடுகளிடம் 15 பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகக் கேட்டு வருகிறது.

இது ஒரு புறமிருக்க, சீனாவின் குவாடர் துறைமுகத்தினூடான எண்ணெய்க் குழாய்த் திட்டத்தில் பாகிஸ்தான் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகமாக இருக்கும் என்பதே சீனாவிற்குள்ள தலையிடி. இதைவிட மியான்மாரைக் குறிவைத்துள்ளது. இதன்வழியாகவும் ஓர் திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் முயல்கிறது.

இப்படியான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சீனா சிரமங்களை எதிர்கொள்ளுமா? பாகிஸ்தான், மியான்மார் மக்களிடமிருந்து எதிர்ப்புகள் கிழம்புமா? காலம் பதில் சொல்லும்..!





# தனிமையின் கோரமும் தனிமைப் படுத்தலின் கொடூரமும்



**யாழ் தர்மினி பத்மநாதன்**

கொரோனா காலம் சுற்றிச் சுழன்று கொண்டிருந்த உலகையே கட்டிப்போட்டது. எங்கும் பீதி எதிலும் பீதி என மக்களை பயமுறுத்தி திண்டாட வைத்ததில் பரபரப்பூட்டுவதில் ஊடகங்கள் சளைக்கவில்லை.

குறித்த நாட்டு ஊடகங்களினால் கட்டுப்படுத்த முடியாத ஊடகங்களை உச்சி சமூக ஊடகங்கள் போட்டியிடத் தொடங்கின. சின்னச் சின்ன விடயங்கள் கூட ஒழிப்பு மறைப்பின்றி வைரலாகத் தொடங்கின. ஆயினும் இவ்வாறு பல்வேறு வழிகளில் சமுதாய ஊடகங்கள் இயங்கியபோதும், தொலைக்காட்சி, வானொலி என்பனவும் கொரோனா அவலங்களிற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தன.

வேறு எந்த சம்பவங்களையோ தகவல்களையோ மக்கள் அறிந்ததாக நினைவில்லை. அத்துடன் ஊரடங்கு கால அறிவிப்புடன் பத்திரிகைகள், அதாவது அச்சு ஊடகங்கள் எல்லாம் தங்கள் பணியினை நிறுத்திக் கொண்டதுடன் அவற்றை இணைய இதழாக்கிக் கொண்டன. இதனால் அச்சு ஊடகங்களின் வரவு குறித்து பெரும் கதையாடல் ஆரம்பமாகின.

ஊரடங்கிற்குரிய காலங்களில் தொலைக்காட்சிகள் வைத்தியசாலை சம்பவங்கள், சிகிச்சைகள், கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசத்திற்கான கிருமி நாசினிகள் தெளித்தல், மற்றும் கொரோனா கால சுகாதார நடவடிக்கைகள், கடைப்பிடிக்க வேண்டிய - தவிர்க்க வேண்டிய விடயங்கள் எனப் பல்வேறு விடயங்களை ஒளிபரப்பு செய்து வந்தனர்.

குறிப்பாக யாழ் மாவட்டத்தில் ஓய்வில்லாத பணியாக டான் தொலைக்காட்சி சமூக நலன் கருதி இவ்வாறான விழிப்புணர்வு நடவடிக்கையினை மேற்கொண்டது. ஏனைய பத்திரிகைகள் பல்வேறு தகவல்களுடன் வெளிநாட்டு தகவல்களையும் பரிமாறிக் கொள்ள தென்னிந்திய தொலைக்காட்சிகளில் பல்வேறு நிகழ்வுகள் ஒலி, ஒளிபரப்பு செய்யப்பட்டன.

குறிப்பாக தமிழ் நாட்டில் கடந்த மாதம் வரை தொலைக்காட்சி தொடர் நாடகங்களுக்கான படப்பிடிப்பு இடம்பெற்றுவந்தன. சென்னையில் கொரோனா தொற்று அதிகரிக்க தொடங்கியதுமே படப்பிடிப்பை நிறுத்திக் கொண்டனர். அத்துடன் குறித்த நேரத்தில் ஏற்கனவே காட்சிப்படுத்தப்பட்ட காட்சித் துண்டங்களை மீள் ஒளி பரப்பு செய்து வருகின்றன..

இந்த தொலைக்காட்சித் தொடர்களின் மாயை என்பது பெண்களை மட்டுமின்றி ஆண்களையும் தன்னகத்தே இழுத்து வைத்துள்ளது என்பது மிகையல்ல. இது குறித்து, கே.லிங்கம் (வயது 60) என்பவஉ குறிப்பிடுகையில், “கொரோனா ஆபத்து என்று சொல்லிக் கொண்டு உள்ளனர். மாஸ்க் போட வேணும், கை கழுவ வேணும், வீட்டுக்கு வந்தால் குளிக்க வேணும், இதெல்லாம் எமது வாழ்க்கையில் பொது நடைமுறை. மாஸ்க் தான் புதிதாக சேர்க்க வேண்டியுள்ளது. இந்த நிலைமை பெரும் சுமையாக உள்ளது. திடீரென்று அவசரத்துக்கு எங்கும் போக முடியாது. போனால் வெயிலில் வரிசையில் தான் நிற்க வேணும். எங்களுக்கு பக்கத்தில் ஒருவர் நின்றால் அவரை தள்ளி நில்லுங்கோ என்று நாங்கள் தான் சொல்ல வேண்டியிருக்கு. தாங்களாகவே உணர்ந்து விளங்கிக் கொள்ள எங்கட சனம் தயாரில்லை. எங்கட சனத்திற்கு துணிவும் இல்லை. தெளிவும் இல்லை. சொல்வதை கேட்கும் புரிந்துணர்வு, விழிப்புணர்வு இல்லை. அதனால்தான் ஏன் தள்ளி நிற்க வேணும் என்பது கூடத் தெரியாமல் உள்ளனர். மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது பொலிஸ்/க்கு பயந்து கெல்மட் போடுவது போன்றுதான் முகக் கவசமும் போடுகின்றனர். இந்த மனநிலை சனத்தை திடீரென்று பயமுறுத்தி குழப்பி விட்டிட்டுது.

“தனிய இருங்கோ, எட்ட நில்லுங்கோ கிட்ட வராதையுங்கோ!” இப்படியெல்லாம் கட்டுப்பாடு போட்டதும் அதை ஏற்க யாராலும் முடியவில்லை. இத்தாலி, பிரான்ஸ் நாட்டில் இடம்பெற்ற அவலம் போல் எமது நாட்டில் இல்லை என்பதால் மக்கள் பாதுகாக்கப்பட்டனர். இதனால் உள் வீட்டுக்க இருந்த போதும் ஒருநாள் தொடக்கம் இரண்டு மூன்று நாள்தான் வீட்டில் இருக்க முடியும்.

மாாதக்கணக்காக வீட்டிலிருப்பது யாரால் முடியும்? மூளைக்கு வேலை இல்லாமல் இரத்தம் ஓடாமல் மூளை பிசகிவிடும். அப்பிடி வராதிருக்கவே நாடகங்கள் மீள் ஒளிபரப்பானது. இந்த சேவை தனிமையை போக்கியதென்றே சொல்ல வேண்டும். சுய தனிமைப் படுத்தல் போன்றே நான் தனிமைப்படுத்தப்பட்டேன். எனக்கான உணவு, தேடல், தொடக்கம் தயாரித்தல், ஒழுங்குபடுத்தல் எல்லாமே நான்தான். கைச் செலவுக்கு இருந்த பணம் செலவாகினது. சில உலர் உணவுப் பொதி கிடைச்சது. அதிலும் எனக்கு தேவையானதை பொருத்தமானதை மட்டும் பெற்றுக் கொள்வேன். இந்தக் காலப்பகுதியில் குடிக்காமல் இருக்க முடியவில்லை. ஆனால் எப்படியோ கட்டுப்படுத்தி இருந்திட்டன்.

டிவியில் நாடகம், படம் என்று பார்க்கிறதோட சரி. சும்மா இருக்கும் நேரங்களில் எல்லாத்தையும் நினைக்கப் பயமாய் இருக்கும். மனசு சஞ்சலப்படும் என்ன வாழ்க்கை? என்று இருக்கும். பேப்பர்களைப் பாஉத்தால் இளம் பிள்ளைகள் தற்கொலை செய்யிறதும், விபத்துக்களில் சாகிறதும் என்றுதான் காணக் கிடைக்கிது. எங்கட பிள்ளைகள் வாழ வேண்டிய வயசில அநியாயமாய் ஏன் சாக நினைக்கினம்? இனி தேர்தல் வரப் போகிறது.அந்தக் குப்பாடிகள் கொஞ்ச சனத்தை உசுப்பேத்தி கூத்தடிக்கவும் சனத்தை ஏமாத்தவும் வருவாங்கள். ஒருவேளை சாப்பாடு இல்லாத சனம் எத்தினை இருக்கும். அதுகளை தேடிப் போக மாட்டினம். வசதி வாய்ப்பு இருக்கிறவனுக்கு தான் பொன்னும் பொருளும் குடுத்து தங்களுக்கு புகழ் சேர்க்கிறது. இந்த கம்பஸிலயும் துணை வேந்தருக்கு சண்டையாம். ஆமிக்காரனில பெரியவனை போடப் போகினமாம் உண்மையே? எங்கட தறுதலைகள் ஒற்றுமையாய் இருந்தால் ஆமியும், பொலிசும் ஏன் அந்த எல்லைக்கு போவான்?

எங்கடையளிட்டை ஒற்றுமை இல்லை அதால தானே முள்ளிவாய்க்காலில இத்தனை உயிருக்கும் வாயக்கரிசி போட்டவங்கள். சரியான தமிழ்த் தலைமை இருக்குமெண்டால் ஒழுங்கு முறையாய் கேக்க வேண்டியதைக் கேட்கலாம். கட்டையில போறவனுக்கும் கதிரை ஆசை வந்தால் இளம் பெடியள் எப்பதான் முன்னுக்கு வாறது. அதால தான் இந்த ஆவா கோவா குறுப்புக்கள் தொடங்கி இருக்குப் போல. பெடி பெட்டையளுக்கும் இப்ப சரியானவழிகாட்டிகள் இல்லை. இப்படியெல்லாம் நிறைய யோசனைகள் வரும். சாப்பிட்டமோ இல்லையோ இந்த யோசனைகள் வரும். தனிமை பொல்லாத வெறுமை. மனசை வதைச்சு சித்திரவதை செய்யும். இல்லாட்டி விசர் ஆஸ்பத்திரி தான். வாழப் பிறந்திட்டோம் இருக்கும் வரை வாழ்த் தானே ஆகவேண்டும்”. இப்போ கொஞ்சம் கொஞ்சம் தனிய இருந்து பழகிட்டுது. சனம் சந்ததியோட முன்பும் இல்லை. இப்பவும் அறவே இல்லை. ஏலாத காலம் என்று நடந்து திரியிறதுக்கு முடியாத போதுதான் என்ன செய்யப் போகின்றேனோ தெரியாது என்ற பயம் வருகின்றது எப்படி சாவேன், யார் உதவுவார்கள்? எப்படி உதவுவார்கள்? எனக்கென்று என்ன உண்டு? போன்ற கேள்விகள் மனசைத் துளைக்கும். மனசை திடப்படுத்தினாலும் தனிமையும் தனிமைப்படுத்தலும் அவ்வளவு சுலபம் இல்லை.” என்றார்.

அதே போன்று அண்மையில் திருநெல்வேலியில் உள்ள வங்கி ஒன்றிற்கு சென்றேன். கைகழுவி உடல் வெப்பம் கணக்கிடப்பட்ட பின் உள்ளே அனுமதித்ததும் பணப்பரிமாற்றல் பகுதியில் வரிசையில் நின்றேன். நடுங்கிய குரலில் ஒரு வயோதிபர் கதைக்கும் சத்தம் கேட்க பின்னால் திரும்பிப் பார்த்தேன். வயோதிபர் ஒருவர் தனக்கு உதவும் படி பாதுகாப்பு ஊழியரிடம் உதவி கோருகின்றார். மேலும் அவரை பார்த்த பின்தான் அவர் என்னுடைய பல்கலைக்கழக விரிவுரையாளர் (திருநெல் வேலி வயது 80) என்பதை அடையாளம் கண்டேன். அவரருகில் சென்று நலம் விசாரித்து உதவிதேவையா எனக் கேட்டேன். பாதுகாப்பு ஊழியர் உதவுவதாகக் கூறிய அந்த விரிவுரையாளவர் சொன்னது “எப்பவோ போய்ச் சேர வேண்டிய நான் இன்னும் பூமிக்குப் பாரமாக இருக்கிறேன். அவாவுக்கும் உடல் நிலை நல்லா இல்லை. உணவு உண்பதும் சிரமம் தொண்டையும் நோவான நிலையில் உள்ளா. என்னாலும் ஏலாது. பக்கத்தில இருந்து சைக்கிள் ஓடி வரமுடியவில்லை. மூச்சு வாங்குது. கை நடுங்கிது. என்னை அவா பராமரிக்கவும் நான் அவாவை பராமரிக்கவும் சரி இப்படித்தான் இருக்கிறம். இப்போ உதவிக்கு யாரும் இல்லை. நாங்கள் இரண்டு பேரும் தனியாகத் தான்” எனக் கூறிய அவரது வார்த்தைகளுக்குப் பதில் கூற முடியாத அளவில் வாயடைத்துப் போய் விடைபெற்றேன். கொரோனா காலத்திலும் உதவிகள் இன்றி முதுமையில் மிகக் கஷ்டப்பட்டுள்ளார் என்பதும், மூன்று பிள்ளைகள் இருந்தும் அவர்கள் புலம் பெயர் நாட்டில் வாழ்வதனால் பெற்றோர் தனித்துவிடப்பட்டுள்ளனர் என்பது மட்டுமின்றி எப்போதுமே கலைஞர்களால் சலசலக்கும் அந்த இயற்கை எழில் கொஞ்சும் வீட்டில் இவர்கள் இருவர் மட்டுமே முதுமைக்காலத் துயரில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பல்கலைக்கழக விரிவுரையாளனாக, அவரின் எத்தனை உறவுகள் சங்கமிக்கும் அந்த வீடும் வளவும் இன்று சுயதனிமைப்படுத்தலூடாக தொடர்பாடலற்றுப் போயுள்ளது. உதவிபுரிய ஆட்களின்றித் தனிமை வாழ்வாகிப் போய்விட்டது.

மேலும் நாவலர் வீதியில் உள்ள நண்பி ஒருவரையும் சந்திக்க ஆவலுடன் சென்றேன். அவரின் அனுமதியுடன் வீட்டினுள் சென்றேன் அவரோ சந்தித்ததில் பெருமகிழ்வு அடைவதை அவரது முகங்கள் பேசின. “ஊரடங்கு போட்டதும் என்னிடம் இருந்த துணிகளை பயன்படுத்தி முகக்கவசம் செய்து நண்பர்கள் மற்றும் அயலில் உள்ள வெளியில் செல்பவர்களுக்கு கொடுத்தேன். என்னால் இயன்ற சேவையாக அதனை செய்யமுடிந்தது. தவிர வீட்டுத் தோட்டம் செய்தல், பூங்கன்று வைத்தல், வீட்டை, காணியை அழகு படுத்தல் என்று எனது நேரங்களை பயன்படுத்திக் கொண்டேன். மிக அவசரத் தேவையுடையவர்களை தொலைபேசியில் நலம் விசாரித்தேன். இதைவிட என்னுடைய படிப்பித்தல் கலைக்கான நாட்கள் ஓய்வில் இருப்பதனால் அவற்றைவிட்டு ஏனைய நேரங்களை பயன்படுத்திக் கொண்டேன். டீவி பார்ப்பதில்லை. தேவையற்று வெளியில் போனதில்லை. பொருட் தேவைகளுக்கு நண்பரின் உதவியுடன் தொலைபேசியில் பதிவு செய்து வீட்டிற்கு வரவழைத்துக் கொண்டேன். சாதாரண நாளிலும் நான் வகுப்பு, மற்றும் சேவை சார்ந்து இயங்குவதனால் பெரிய வித்தியாசம் இருக்கவில்லை. ஆனாலும் கொரோனா தனிமைப்படுத்தல் போன்றே எனக்கு சுய தனிமையில் இயல்பாகவே அமைந்து விட்டது”. என்றார் கலைஞரும் வீணை இசையாசிரியருமான விஜய லஷ்மி என்பவர்.

இவ்வாறு தான் எம் சமூகத்தில் வெளித் தெரியாத மூலைமுடுக்கெங்கும் உறவுகள் இருந்தும் உதவிகளற்று பலர் மறைந்து வாழக் கூடும். குறிப்பாக கொரோனா காலம் அவர்களை மனச்சிதைவுக்குட்படுத்தி அவல நிலையை கொடுக்கும். இத்தகைய நிலைகள் எதிர்பாராத சம்பவங்களையும் ஏற்படுத்தக் கூடும். இயன்றவரை சமூக அக்கறையுடைய ஒவ்வொருவரும் நேரில் சென்று உதவ முடியாத போதும் தொலைபேசியில் ஆவது அவர்களுக்கான பலத்தையும் பாதுகாப்பையும் நம்பிக்கையையும் உறுதிப்படுத்துதல் அவசியம். அவர்களின் மனங்களை ஆற்றுப்படுத்தும் வகையில் மகிழ்ச்சிகர சம்பவங்கள் நினைவூட்டுதல் பகிர்தல் அவசியம். சமூக இடைவெளியை பேணும் வகையில் அவர்களுடனான நேரடித் தொடர்பாடலையும் உதவிகளையும் மேற்கொள்ளவும் முடியும். இருக்கும் போதும் வாழும் போதும் தனிமையிலும் முதுமையிலும் வாழும் சமூகத்தை கண்ணெடுத்து பார்க்காத நாம் அவர்கள் இல்லாத போது வெறும் வாழ்த்து மடலகளில் புகழ்பாடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. எனவே தனிமையும் தனிமைப்படுத்தலுமான உளநெருக்கடியிலிருந்து எம் முதுமை சமூகத்தை பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் முன்வருதல் அவசியம்.

# காற்று வாக்கிலே....

"தமிழர்களின் பிரச்சினையை ஆராய 12 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை நியமிக்கப் போகிறார்களாம்.

"தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவை கிடையாது."
கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசை நிர்ப்பந்திக்கவோ அல்லது அதன் மீது அழுத்தம் மேற்கொள்ளவோ தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் முயல முடியாது..
"சுமந்திரன் ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தையை முன்னெடுக்க வேண்டிய தேவை கிடையாது".

தமிழ் - முஸ்லிம் கட்சிகளுக்கு தலைமை தாங்கும் ஐயாமாரே மேற்கண்ட செய்தியை நீங்கள் அறிந்திராவிட்டால் இப்போதாவது தெரிந்து கொள்க...! இப்படி சொல்லியிருப்பவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர அவர்களே...! அவர் சொல்வது என்னவென்றால் கடந்த காலங்களில் தாங்கள் சிறுபான்மை கட்சிகளுடன் முரண்பட்டபோதும் இனிவரும் காலங்களில் முரண்பட மாட்டார்களாம்... இணக்கமாகவே செயற்படுவார்களாம்.. அமையப்போகும் புதிய அரசில் எத்தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கி விடுவார்களாம்...!

(எங்கே எல்லாரும் "ஜோரா" ஒரு தடவை கைதட்டுங்கள் பார்க்கலாம்)

என்னையா! தமிழ்த்தலைவர்களே உங்கள் தலையீடும் ஆலோசனையும் இல்லாமலே ஒரு குழு அமைத்து அதன் மூலமாக பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களே தீர்வைத் தரப் போகிறார்கள். நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? இன்னும் நாலு புதுக்கட்சிகளாகப் பிரிந்து நின்று "கிளித தட்டு" மறிக்கப் போகிறீர்களா?



தமிழர்களை தீர்த்துக் கட்டியவர்களே எஞ்சியுள்ளோர்க்கு தீர்வைத் தரப்போவதாகக் கூறுவதை எண்ணி அழுவதா? சிரிப்பதா?

தேர்தலின் முன் ஆடுகளத்தில் சந்திப்பவர்கள் தேர்தல் முடிந்தபின் அதன் வேறு களத்தில் நிற்பார்கள் -கவனம்...!

"தமிழினத்தின் கவசம் போராளிகள் அவர்களின் ஆதரவு எமக்கு பலம்" கடைசியாக சம்பந்தன் ஐயா இந்த முடிவுக்கு வந்து இதைப் பகிரங்கமாக அறிவித்ததை வைத்து அவருக்கு தெளிவு அல்லது ஞானம் பிறந்து விட்டதாக எவரும் தவறாக நினைத்து விட வேண்டாம்.

வழமை போல் இதுவும் அவரது தேர்தல் கால "ஸ்டன்ட்" தான். விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் தனது பெயரும் முதல் வரிசையில் இருந்தது என்று சொன்னதும் இதே வாய்தான். அவரது அரசியல் நாக்கு எப்படியெல்லாம் அரசியலில் தடம் புரளும் என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. ஆனாலும் அவரது இந்த அறிவிப்பானது இரு செய்திகளை வெளிப்படுத்துகின்றன. அவற்றை வாக்காளப் பெருமக்கள் தங்கள் மனதில் ஆழமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஒன்று தமிழ் மக்களை இன்று வரை பாதுகாத்து வருவதும் அவர்களுக்கு கவசமாக இருந்து வருவதும் போராளிகளின் அதாவது விடுதலைப்புலிகளின் தியாகங்களும், வீரமும் மட்டுமே என்பது, ஆகவே தமிழ் கட்சிகளும் தலைமைகளும் தமிழ் மக்களை எந்த விதத்திலும் பாதுகாக்கும் வல்லமை இல்லாதவர்கள் அவர்களால் தமிழர்களுக்கு எத்தகைய பாதுகாப்பு உத்தரவாதத்தையும் வழங்கும் வலு இல்லை என்பது மேற்குறித்த செய்தி மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது - போராளிகளின் குறிப்பாக விடுதலைப் புலிகளின் ஆதரவு மட்டுமே இப்போதைக்கு, கூட்டமைப்புக்கு பலத்தை வழங்கக் கூடிய சக்தி என்பதாகும்.

அதாவது கூட்டமைப்பு இன்று பலவீனமான நிலையில் உள்ளது எப்படியாவது விடுதலைப்புலிகளின் ஆதரவுப் பலத்தை பெற்றுக்கொண்டால் மட்டுமே தேர்தலில் வெற்றி கொள்ள முடியும் என்ற நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது என்பதும் இச்செய்தி மூலம் பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது!

அரசியல் ரீதியில் அஹிம்சை வழியில் பேச்சுவார்த்தைகள் மூலம் உரிமைகளை வெல்ல முடியும் என்று நம்பும் கூட்டமைப்பினர், "ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள்" எனக் கூறிக்கொள்ளும் பிரமுகர்களை வைத்துக் கொண்டு போராளிகளின் பலத்தை யாசிப்பது அசிங்கமாக இல்லையா?




ஜனாதிபதித் தேர்தலின் போது பௌத்த சிங்கள மக்களின் பேராதரவுடன் பதவிக்கு வந்த கோத்தபாய ராஜபக்ஷ அதனை வெளிப்படையாகவும் பெருமையாகவும் கூறிக் கொண்டது நினைவிருக்கலாம் அதே சமயம் அத் தேர்தலில் சிறுபான்மை சமூகத்தவர்கள் ராஜபக்ஷக்கள் ஆட்சிபீடம் ஏறுவதை விரும்பவில்லை என்ற செய்தியும் அவர்களுக்கு உவப்பானதாக இருக்கவில்லை. சிங்கள பௌத்த அடிப்படைவாதிகள் அத்தேர்தல் வெற்றியை சிறுபான்மை இனத்தவரின் தோல்வியாக அடையாளப்படுத்த முயன்றதுடன் இந்த நாட்டின் சிறுபான்மையினத்தவரின் ஆதரவுப் பலமின்றி சிங்களக் கட்சிகளால் தனித்து உறுதியான ஆட்சியை அமைக்க முடியும் என்ற கர்வத்தையும் கூட ஏற்படுத்தியிருந்தது.
இதனாலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னரான இன்று வரையிலான காலப்பகுதிக்குள் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதக் கருத்தியல் தீவிரம் கொள்ளத் தொடங்கியதுடன், சிறுபான்மை சமூகத்தவரை அச்சுறுத்தும் வகையில் நிர்வாக கட்டமைப்பிலான மாற்றங்களும் தோற்றம் கொண்டன என்றும் அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.
எதிர்வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலின் பிரதான எதிர்கட்சியான ஐ.தே.கட்சி பிளவுண்டு பலவீனமுற்று இருப்பதாலும் ஏனைய சிறுபான்மையினத்தவரின் கட்சிகளும் உட்கட்சி முரண்பாடுகளால் பிரிவுண்டு நலிவுற்று கிடப்பதாலும் ராஜபக்ஷக்களின் கட்சி அவர்கள் எதிர்பார்க்கும் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பலத்தை சுலபமாக பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் களமிறங்கிய போதும் தேர்தல் நெருங்க நெருங்க ஒரு இனம்புரியாத அச்சம் அவர்களை சூழத் தொடங்கியதாலோ என்னவோ "நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவுப் பலமின்றி தனியாக மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பலம் பெற்று விடுவோமென எவரும் பரப்புரைகள் செய்யக் கூடாது" என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பது கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது.

"கை நீட்டி வாக்கு கேட்பதும் கைகுலுக்கத் தயாராக இருப்பதாக காட்டிக் கொள்வதும் ஜனநாயக அரசியல் வாதிகளின் தேர்தல் கால மூலோபாயம்" ராஜபக்ஷக்கள் இதற்கு விதிவிலக்காகி விடமுடியாது. ஆனால் எல்லா அரசியல் மூலோபாயங்களுக்கும் பின்னால் உள்நோக்குடன் கூடிய ஒரு ராஜதந்திரம் இருக்கவே செய்யும்.

அது பகையாளிகளை மட்டுமல்லாது பங்காளிகளையும் கூட தேவையெனில் பொறிக்குள் தள்ளிவிடத் தயங்காது. "ஆற்றைக் கடக்கும் வரைதான் அண்ணன் தம்பி அதன் பிறகு நான்வேறு நீ வேறு" என்ற கருத்து சிறுபான்மை தலைமைகளுக்கு பட்டறிவுப் பாடம் தானே! 'புரிந்து கொண்டால் சரி....!"



"பௌத்த மதத்தையும், தொல்பொருள் சின்னங்களையும் பேணிப் பாதுகாத்தல் என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு உடமையாக்கப்படும் நிலப்பரப்பில் சிங்கள மக்களைக் குடியமர்த்தி அதன் மூலம் கிழக்கு மாகாணம் முழுவதையும் இயலுமானால் வடக்கு மாகாணத்தின் கணிசமான பகுதியையும் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளாக மாற்றியமைத்து இரு மாகாணங்களுக்கும் இடையிலான மொழி ரீதியிலான பாரம்பரியத் தொடர்பை இல்லாமற் செய்வதே புதிதாக நிறுவப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் திட்டமும் நோக்கமுமாகும்".

இவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் இன்றைய ஆட்சியாளரின் "சதி" நோக்கத்தை புரிந்து கொண்டுள்ளவர் வேறுயாருமல்ல இதே ராஜபக்ஷக்களின் ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான நிரந்தரமான தீர்புக் கிடைக்கும் என்று தான் நம்பினாரோ இல்லையோ தமிழ் மக்களை நம்ப வைக்க முயன்று வரும் சம்பந்தன் ஐயாவே தான்.

நாட்டை முழுமையாக சிங்கள மயமாக்கும் திட்டத்துடன் செயற்பட்டு வரும் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார் என்ற வகையிலான சமிக்ஞைகளை விடுத்துக் கொண்டு ஜனாதிபதியின் செயலணிக்கு எதிராக போர்க்கொடியும் தூக்குகிறார் ஐயா....

இதனைத்தான் பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடும் "ஆயா" வேலை என்பது. ஐயா ஆயாவாகலாமா?

வயது ஏற ஏற அறிவு தெளிவதும் உண்டு. அறளை பெயர்வதும் உண்டு... ஐயாவுக்கு ஏற்பட்டிருப்பது என்ன? அவருக்குத் தான் தெரியும்...



கல்கி

நமது இலங்கைக் கடிதம்....
- 23. 08. 1953 கல்கி -

# அமளி துமளி

இவ்வாரம் இலங்கைக்கு மிக மிகச் சோதனையான வாரம். பாரதூரமான வகுப்புக் கலகத்தில் கொந்தளித்த 1815 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்நாட்டில் இப்பொழுது ஏற்பட்டதைப் போன்ற இத்தனை பரபரப்பான நிலைமை வேறு என்றும் ஏற்பட்டது கிடையாது. 12, 13 ஆம் திகதிகளில் கொழும்பு நகரம் அல்லோல கல்லோலப் பட்டது. வெளியில் தலை நீட்டினால் கல்லடி. போத்தல் (இலங்கைத் தமிழ் பாஷையில் போத்தல் என்றால் பாட்டில்) அடி, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், இரண்டு தினங்களுக்கு கீழ்த் திசையின் அழகு மிக்க கொழும்பு மாநகரம் நரகலோகம் போலிருந்தது. பஸ்களைத் தாக்கிக் கவிழ்ப்பதும், கார் டிராம்களைக் கல்லால் அடிப்பதும், டெலிபோன் தந்தி கம்பிகளைத் துண்டிப்பதும் ஸ்டோர்களுக்குத் தீயிடுவதுமாகக் காடையர்கள் அழிவு வேலைகளில் வரம்பு மீறி ஈடுபட்டிருந்தார்கள்.

ரயில்வே, தபால் இலாக்காக்களுக்கும் தனிப்பட்டவர்களின் சொத்துகளுக்கும் ஏற்பட்ட நஷ்டத்தை இதற்குள் மதிப்பிட்டுச் சொல்ல முடியாது. இதை எழுதும் வரை மொறட்டுவை ஸ்டேஷனுக்கு அப்பால் ரயில் போக்குவரத்து இல்லை ஆதலால் வெளியிடங்களிலிருந்து பூராத் தகவல்களும் கிடைத்த பிறகுதான் மொத்த சேதத்தை ஒருவாறு மதிப்பிட முடியும். சுமார் 40 பஸ்கள் சேதமடைந்துள்ளன. 25 பேர்கள் கொல்லப்பட்டு அனேகர் காயமடைந்திருக்கிறார்கள். கொழும்பில் மணி மார்கட்டிலுள்ள உதவி உணவு கட்டுப்பாடு அதிகாரியின் காரியாலயமும் கேகாலையிலுள்ள ஒரு அரசாங்கக் கட்டிடமும் தீயில் பெருஞ் சேதமடைந்தன. தனிப்பட்ட பல ஸ்டோர்களும் விஷமிகள் வைத்த நெருப்புக்குப் பலியாயின.

பெரும்பாலும் இந்தியர்கள் வசிக்கும் செட்டியார் தெருவில் ஒரு நகைக் கடையிலும் மற்றும் இரண்டு ஜவுளிக் கடைகளிலும் பட்டப்பகலில் காடையர்கள் நுழைந்து கொள்ளையடித்தார்கள். திடகாத்திர சாலிகளான நூற்றுக் கணக்கான இந்தியர்கள் அந்த தெருவிலிருந்து, கொள்ளையிடப்பட்ட வீட்டிலுள்ளவர்களுக்கு உதவி புரிய ஒருவராவது முன் வராமல் வேடிக்கை பார்த்துக் கொண்டு விலகி நின்ற வெட்கக் கேட்டை எழுதவும் வெட்கமாயிருக்கிறது. புறக்கோட்டை, கொட்டாஞ்சேனை, மருதானை, கிருல்லப்பனை, ஆகிய இடங்களில்தான் அட்டகாசம் மிக அதிகமாயிருந்தது, மகாரை சிறைச்சாலையில் கைதிகள் ஒரு ஸ்டோருக்குத் தீ வைத்தனர். கண்டியில் சர்வ கலாசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். யாழ்ப்பாணம், நுவரேலியா, திருகோணமலை, மட்டக்களப்பு முதலிய பகுதிகளில் அமைதி நிலவியது.

இவ்வளவு அமளி துமளிக்கும் காரணம் 12 ஆம் தேதி இடது சாரிக் கட்சிகள் நடத்திய வேலைநிறுத்தம் தான். அரசாங்கம் அரசி விலையை உயர்த்தியதை ஆட்சேபித்து ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் செய்ய இடதுசாரிக் கட்சிகள் ஏற்பாடு செய்திருந்தன. இலங்கை இந்தியக் காங்கிரஸ், இலங்கை இந்திய வர்த்தகச் சங்கம் ஆகியவை இடது சாரிகளோடு சேர்ந்து அரிசி விலை உயர்வை அழுத்தமாகக் கண்டித்தன. இலங்கை இந்தியக் காங்கிரஸ் தோட்டத்துக்குத் தோட்டம் ஆட்சேபனைக் கூட்டங்கள் நடத்தித் தனது எதிர்ப்பை அரசாங்கத்துக்கு தெரிவித்துக் கொண்டது. ஆனால் ஒரு தோட்டத்திலாவது ஒரு அசம்பாவிதமும். நடைபெறவில்லை. காங்கிரஸ் வேலை நிறுத்தத்தில் பங்கு பற்றியிருந்தால் பொலிஸ் படைகளில் பெரும் பகுதியைத் தோட்டப் பகுதிகளுக்கு அனுப்ப நேரிட்டுக் கொழும்பு நகரின் நிலைமை கேள்வி முறையின்றிப் படுமோசமடைந்திருக்கும். நல்ல நேரத்தில் இந்தியக் காங்கிரஸ் தலைவர்கள் விவேகத்துடன் நடந்து அரசாங்கத்துக்கு உதவியாயிருந்ததை அரசாங்கம் மறக்கவே முடியாது.

இடதுசாரிகள் நடத்திய வேலை நிறுத்தத்தில் கொழும்பிலுள்ள தொழில் ஸ்தாபனங்களும் பங்குபற்ற மறுத்தன. அரசாங்க குமாஸ்தாக்கள் அவ்வளவு பேர்களும் வேலை நிறுத்தம் செய்ய மறுத்து வேலைக்கு வந்தார்கள். பஸ் டிராம்வே தொழிலாளரும் வேலைக்கு வந்தனர். தங்கள் முயற்சி புசுபுசுத்துப் போகுமோ என்று கூட ஒரு நிலைமையில் இடதுசாரிகள் அஞ்சினர். இந்தச் சந்தர்ப்பத்தைக் காடையர்கள் பயன்படுத்திக் கொண்டு கொள்ளையடிக்கவும் முற்படவே கடைகளெல்லாம் படார் படாரென்று மூடப்பட்டன. கல்லடிக்குப் பயந்து வேலைக்குச் சென்ற தொழிலாளரும் வேலை ஸ்தலங்களை விட்டு வெளியேறி வந்தார்கள்.

12 ஆம் திகதி பகலில் நடந்த அட்டூழியங்களைப் பார்த்த பிறகு அரசாங்கம் நாடு முழுவதற்கும் ஒரு மாத காலத்துக்கு அவசர நிலைமையைப் பிரகடனப் படுத்தினர். இரவில் கொள்ளைகள் நடப்பதைத் தடுக்க மேற்கு, தெற்கு மாகாணங்களில் மாலை ஆறு மணி முதல் காலை ஆறு மணி வரை தெருவில் யாரும் வரக்கூடாதென்று ஊரடங்கும் சடத்தை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தக்க சமயத்தில் ஊரடங்கும் சட்டத்தை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டு வந்திருக்கா விட்டால் நிலைமை படுமோசமடைந்திருக்கலாம். தெருவுக்குத் தெரு இயந்திர பீரங்கிகள் சகிதம் ராணுவப் பாதுகாப்பை ஏற்படுத்தி நிலைமையைக் கட்டுக்குள் அடக்கியுள்ளனர். காடைத்தனங்களில் இடதுசாரிகளுக்குச் சம்பந்தமில்லை யென்ற பொழுதிலும் வேலை நிறுத்தத்தின் விளைவாகக் காடைத்தனம் ஏற்பட்டபடியினால் அரசாங்கத்தைக் கண்டித்து வந்தவர்கள் கூட அமைதியை நிலை நிறுத்துவதில் ஆளும் கட்சியோடு பரி பூரணமாக ஒத்துழைக்கிறார்கள். அரசாங்கக் கொள்கையை ஆட்சேபிக்க ஜனநாயக ஆட்சியில் பொது ஜனங்களுக்குச் சர்வ சுதந்திரமும் உண்டென்றும் ஆனால் இந்த உரிமையில் பலாத்காரம் தலை காட்டுமானால் அதை அடக்குவது அரசாங்கத்தின் தவிர்க்க முடியாத கடமையென்றும் “வீரகேசரி” முதலான பல பத்திரிகைகளும் தலையங்கம் எழுதியுள்ளன.

இந்தக் குழப்பங்கள் காடைத்தனங்களே தவிர அரசியல் கிளர்ச்சியல்ல. இந்தியத் துவேஷக் கிளர்ச்சியுமல்ல. இந்தியர்களின் சில கடைகளுக்குள் கொள்ளையடிக்கப்பட்ட பொழுதிலும் அவை இந்தியர் கடைகள் என்பதற்காகக் கொள்ளையடிக்கப்படவில்லை. பல சிங்களவர்களுடைய சொத்துக்களுக்கும் பாரதூரமான சேதமேற்பட்டுள்ளன.

- ரஜனி -



# பரவைக் கடல்

- செ. டானியல் ஜீவா -

அம்மா பரலோக மாதா கோயிலுக்குப் பின்னேரம் ஆறுமணியளவில் போயிற்று வந்து எங்கள் வீட்டின் படிக்கட்டில் உட்கார்ந்து இருந்தாள்.நான் அப்போது தான் பின்னேரக் கடனை கடற்கரையில் கழித்து விட்டு கடலிலேயே கழுவி விட்டு வீட்டிற்கு வந்து படிப்பதற்கு ஆயத்தப்படுத்தினேன்.அம்மாவை உற்றுப் பார்த்தேன்.கண்கள் அழுது வீங்கியிருந்தது.நேற்று முன் தினம் தான் நாங்கள் புதிதாக சிறகு வலை பின்னி, இன்று மதியம்தான் பரவைக் கடலில் பாய்ந்து போட்டு வந்த அப்பா களைத்ததுப் போய் விறாந்தையில் தூங்கிக்கொண்டிருந்தார்.அவருடைய மூச்சொலி காற்றில் கலந்து எங்கும் பரவியது.தூங்கிக் கொண்டிருந்தாலும் அவருடைய உடல் போர் வீரர்கள் போல் கம்பீரமாக இருந்தது.

அம்மாவின் முகம் எப்போதும் என் மனதில் ஓரத்தில் தெளிவாகத் தெரியும்.கறுத்த தலைமுடியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளை முடி படர்ந்திருக்கும். இரண்டு காதின் ஓரமாகவும் சில முடிகள் கீழ் நோக்கிச் சுருண்டும், நெளிந்தும் கிடக்கும். மளையாளப் படமான செம்மீனில் வரும் செம்பன்குஞ்சுவின் மனைவி சக்கி போலவே தோற்றமும், உடையும் அணிந்து வீட்டில் இருப்பார்.எங்க ஊரில் அப்படி யாரையும் நான் கண்டதில்லை.ஆனால் வெளியில் செல்லும் போது வழமையான சாறியும், சட்டையுடனுமே செல்வார்.

அம்மா என்னைப் பார்த்து அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் நினைவுக்கு வந்தது..

“மோன எறும்பு போல சுறு சுறுப்பாக இருக்க வேணும். வாழ்க்கை குறுகிய காலம்தான். பிறருக்கு உதவி செய்ய விட்டாலும் தீங்கு செய்யாமல், கடவுளின் பிள்ளையாக வாழ்ந்தாலே போதும். எனக்கு பசி வந்தால் தலையைச் சுற்றிக் கொண்டிருக்கும். கண் மங்கிக் கொண்டு வரும். அப்படி இருக்கும் பொழுது இந்த உலகமே இருண்டது போல உணர்வு இருக்கும் மோனை” என்று சொல்வார், என்னுடைய அம்மா.இப்போ எனக்கும் அந்த பசியில் அதே நிலமை வந்து விட்டது போல் உணர்ந்தேன்.நேற்றுக் குடித்த புளி இலைக்கஞ்சி வயிற்றின் மேற்பரப்பில் எழுந்து என்னை படாத பாடு படுத்திக் கொண்டிருந்தது. இன்று இரவும் வீட்டில் சமைத்த மாதிரி எந்த மணத்தையும் காணவில்லை. “பட்டினிதான் எங்க வீட்டில்” என்று உறுதியாகி விட்டது.

பழைய சிறகுவலை பழுதாகியாதலே, ஒரு கிழமைக்கு முன்னர் புதிய வலையும், நூலும்,கயிறும் யாழ்ப்பாணத்திலுள்ள கடை ஒன்றில் வாங்கினோம். ஒரு கிழமை பிடித்தது அவற்றை ஒழுங்கு படுத்த. பின்னிய வலை நேற்று கடலில் பாயப்பட்டது. இன்னும் வலையினதும்,நூலினதும்,கயிற்றினதும் வாசனை வீட்டைச்சுற்றி நிறைந்து கிடந்தது. இந்தப் பொருள்கள் வாங்குவதற்கு அம்மாவும்,அப்பாவும் பட்ட கஷ்டம் நிறையவே . முதலில் உறவினர்கள் கடன் உதவி செய்வார்கள் என்று எதிர் பார்த்திருந்தோம், கடசி நேரத்தில் அவர்கள் இல்லையெனச் சொல்லி விட்டார்கள். அதன் பின்னர் தான் அக்காவின்ர தோடும் சங்கிலியும்,அம்மாவின்ர தோடும் அடைவு வைத்துதான் இவற்றை வாங்கினோம்.

பசி கிடந்ததால் வயிற்றில் புண் வந்தது போன்ற ஒரு உள் உணர்வு என்னுள் எழுந்தது. கடற்பாசி உடலில் படர்ந்தது போல ஒரு வகையான அரிப்பும், பிசுபிசுப்பும் உடல் முழுவதும் விரவி நெளிவது போல் உணர்ந்தேன். மறுகணமே அது என் மனம் வருந்தியதால் ஏற்பட்ட ஒரு பிரமை என்பதை உணர்ந்தேன்.

என்னுடைய அப்பாவுக்கு நான் பள்ளிக்கூடம் போவதில் பெரிதாக விரும்பம் இருக்கவில்லை என்று எனக்கு தெரியும். அதை அப்பாவின் பல்வேறு வகையான நடவடிக்கைகள் மூலம் நான் கண்டு கொண்டேன். சிறு வயதில் இருந்து கடல் தொழிலுக்கு சென்று வந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதிலேயே, பொருளாதாரத்தின் உச்ச நிலையை அடைந்தவர்களை எங்கள் ஊரில், உறவில் பார்த்து இருக்கிறோம். அதனால் தன்னோடு வந்து தொழிலைப் பழகிக்கொள்ளவே அவருக்கு விருப்பமாக இருந்தது. ஆனால் அம்மா விடாப்பிடியாக என்னைப் படிப்பிக்க வேண்டும் என்று நின்றாள். அதனால் அப்பா தன்னுடைய விருப்பத்தில் இருந்து பின் வாங்கினார்.பொதுவாக அவர் அப்படித்தான். அம்மாவை மீறி எதுவும் செய்வதில்லை. அம்மா அப்பா மீது கொண்ட பாசத்தை வார்த்தையால் சொல்ல முடியாது. அவர் மீது காட்டுகின்ற அன்பையும், ஆதரவையும் என் கண்ணால் பார்க்கும் போது, பல தடவைகள் என் கண்கள் கலங்கிப் போனதுண்டு.



அப்பா எங்களை வளர்ப்பதற்குப் பெரும் கஷ்டப்படுகிறார் என்று எங்கள் வீட்டில் உள்ள அனைவருக்கும் தெரியும். அவர் எங்களைக் கஷ்டப்பட்டு வளர்க்கின்றார் என்று ஒரு நாளும் தன் வாயால் எங்களுக்கு சொன்னதில்லை. அதே நேரத்தில் தான் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதித்து எல்லோரையும் காப்பாற்றி வருகிறார் என்றும் ஒரு நாளும் வெளிக்காட்டவும் மாட்டார்

நாளைக் காலை தொழிலுக்குப் போய் வீடு திரும்பும் வரை தேத்தண்ணியைக் கூட வைத்துக் குடிக்க வழியற்ற நிலைதான் எங்களுடைய குடும்ப நிலை.ஆனால் அம்மாவோ எங்களைப் பிடித்தாட்டுகிற கிரகமெல்லாம், நாளை அப்பா பிடித்து வருகிற மீன் சாதிகளோடு தொலைந்து போய் விடும் என்று நினைத்துக் கொண்டே இருந்தாள்.

“பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே” என்ற செபத்தை அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். மாதா மீது அளவற்ற பற்று கொண்டவர்களாக எங்கள் வீட்டில் எல்லோரும் இருந்தார்கள். அம்மா அப்படி அழுது மன்றாடியதால்தான் பல தடவை மாதாவின் அருள் கிடைத்துப் பல ஆயிரம் ரூபாவிற்கு அப்பா இறால் பிடித்து விற்றவர் என்று அம்மா அடிக்கடி சொல்வது வழக்கம். அதே போல் நாளைக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவள் இருந்து மன்றாடிக் கொண்டிருக்கிறாள்.

அம்மாவின் வேண்டுதல் எல்லாம் பெரிதாகவே இருக்கும். ஆனால் கடவுளுக்கு கொடுப்பது மட்டுமே சிறிதாகவே இருக்கும்.செவ்வாய்க்கிழமை கோயிலுக்கு வந்து பத்து மெழுகுவர்த்தி கொழுத்துவேன் அல்லது காசு உண்டியலில் காணிக்கை செலுத்த வருவேன். இதையும் தாண்டி கொஞ்சம் வேண்டுதல் பெரிதாக இருந்தால் அது இந்த முறை மடு அன்னைக்கு நான் வருவேன் என்பதாகவே இருக்கும்.அம்மா இப்படியெல்லாம் சொல்வதும் அவற்றை வறுமையின் நிமித்தம் செய்யாமல் விடுவதும் வழக்கம்தான். ஆனால் எனக்கோ மாதா பழிவாங்கி விடுவாவோ என்று மனதிற்குள் ஒரு அச்சம் அவ்வப்போது தோன்றி மறையும் போது உடல் நடுங்கி பின் தானாகத் தணிந்து போகும்.நான் சிறுவனாக இருந்த போது முத்துராசா பெரியப்பாவின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது.

ஒரு நாள் பெரியப்பா பெரியம்மாவோடு வாய்த் தகராறு செய்து விட்டு வீட்டிலிருந்து கள்ளுத் தவறணைக்கு மதியம் போலப் போனவர் இரவு ஒன்பது மணிவரை குடி குடி என்று குடித்திருக்கிறார். காலையிருந்து ஒன்றும் சாப்பிடாமல் இருந்த பெரியப்பா கள்ளுக்கடைக்குள் வழமையாக விற்கிற மரவள்ளிக் கிழங்கையும்,செத்த மிளகாய்ச் சம்பலையும் நன்றாக வாங்கிச் சாப்பிட்டிருக்கிறார். கள்ளுத் தவறணை பூட்டிய பிறகு அவர் கடற்கரையால் தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருக்கும் போது காற்றும்,கடல் அலையும் உரத்திருந்தது.மெல்ல மெல்ல நடந்து வரும் போது பெண்களை இழிவாகவும்,கெட்ட வார்த்தைகளாலும் வசை பாடிக் கொண்டு குறுக்கு வழியாக அவருடைய வீட்டிற்கு வருவதற்காகக் கோயில் வளவுக்குள் வந்த போது யாரோ அவரை கடுமையாக முகத்திலும், உடம்பிலும் தாக்கியதால் சத்தி எடுத்தபடியே நிலத்தில் வீழ்ந்து விட்டார்.அன்றிரவே “பெண்ணை இழிவாகவும்,கெட்ட வார்த்தையாலும் பேசியதால் வானத்திற்கும் பூமிக்கும் அண்மித்த பகுதியில் அந்தரத்தில் நின்று ஊருக்குக் காவலாக இருக்கும் மாதாதான் அவரை அடித்ததாக ஒரு கதை பரவத் தொடங்கியது.அந்தச் சப்பவத்தின் பின்னர் அவர் மூன்று நாளாக வீட்டை விட்டுவெளியில் வராமல் வீட்டிலேயே இருந்திருக்கிறார்.இந்தச் சம்பவத்திற்கு பிறகு அவர் அவருடைய மனைவியை மட்டுமில்லை எந்தப் பெண்ணையும் இழிவாகக் கதைப்பதை நிறுத்தி விட்டார். அன்றோடு குடிப்பதில்லை என்றும் முடிவெடுத்து விட்டார்.

நாற்காலியிருந்து கொண்டே அண்ணாந்து இடது பக்கமாகச் சுவரில் ஆணியிலிருந்து தொங்க விடப்பட்ட சிலுவையில் கண்கள் ஒரு கணம் நிலைத்து நின்றது. “சிலுவை சுமந்து,சிலுவையில் அறையுண்டு,சிலுவையிலேயே மரணித்துப் போனாய்.எல்லாச் சுமைகளையும் எங்களுக்காக ஏற்றுக் கொண்டாய். சிலுவையின் சுமை தோள்களைத் தாக்கியதில் நீர் மூன்று முறை விழுந்து எழுந்தாய். ஆயினும் கல்வாரி வரை உன் பயணம் தொடர்ந்தது. திடீரென ஒரு நினைவு வந்தது. அம்மாவுக்கு ஏதாவது நடந்து பொட்டெனப் பூமியை விட்டு மறைந்து போனாள்..? எங்கள் குடும்பத்தின் நிலை என்னாவது? அப்பாவுக்கு ஒண்டு நடந்து விட்டால்..?” நினைக்கவே பயமாக இருந்தது.

ஒரு வகையான மனச் சோர்வு என்னுள்ளே இறங்கித் தாக்கியது. படித்துக் கொண்டிருந்த பாடத்தில் கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது.உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து படுப்பதற்காகப் பாயை விரித்தேன். அப்படியே விழுந்து விட்டேன். தூங்கும் போது இரவு பதினொரு மணியைக் காட்டியது சுவரில் மாட்டியிருந்த கடிகாரம். விழிக்கும் போது அதி காலை ஆறு மணியாகிய இருந்ததால் கண்ணை கசக்கி கொண்டு அப்படியே எழுந்து படிப்பதற்காக உட்கார்ந்தேன். மனம் என்றுமில்லாதவாறு அமைதியாகவும் உற்சாகமா கவும் இருந்தது. ஆனால் நேற்றுக் காலை துவர் வைத்து பாய்ந்த சிறகுவலை மனதில் வந்து அரித்துக் கொண்டே இருந்தது.வலைக்குள் மீன்சாதி ஏதாவது கிடைத்தால்தான் இன்றைய தினம் சந்தோஷமாக இருக்கும். இல்லை என்றால் வழமையான சோகமான நாட்களைப் போல் நகரப்போகுதோ? என்ற அச்சத்தால் மனதில் ஒரு இனம்புரியாத படபடப்புத் தோன்றிக் கொண்டது.

நான் வழமையாகப் படிப்பதற்கு அதிகாலையில் விழித்துக் கொள்வேன்.அதிகாலை வேளையில் தான் எனக்குப் படிப்பதற்கு அமைதியாகவும், வசதியாகவும் இருக்கும்.எனக்கு விஞ்ஞான பாடம் அவ்வளவாக ஓடாது.அந்தப் பாடத்தை மட்டும் நன்றாக சத்தம் போட்டு படிப்பேன். சமய பாடத்தில் அதிக மதிப்பெண்களை எடுப்பேன். வகுப்பில் சராசரிக்கும் கொஞ்சம் மேலாகவே என்னுடைய படிப்பு இருக்கும். என்னுடைய தங்கச்சியை விட நான் நன்றாக படிப்பதால் வீட்டில் எனக்கு கூடுதல் கவனிப்பும் இருக்கும்.தங்கச்சி அவற்றை பெரிது படுத்துவதும் இல்லை. அவ்வப் போது ஏதேனும் சந்தர்ப்பத்தில் பகிடியாக சொல்வாள் அவ்வளவுதான்.

படிக்கும் அறையிலிருந்து கொண்டு ஜன்னல்கள் வழியாக வெளியே பார்த்தால் எங்கள் வீட்டின் பின்புறம் அப்படியே தெரியும்.பின் பக்கமாக கழிப்பறையோ, கிணறோ கிடையாது. பொதுக் கழிப்பிடம், பொதுக் கிணறுகள் என்றே எங்களுடைய வீட்டாரின் வாழ்க்கை இருந்தது. எங்கள் வீட்டைச் சுற்றி கிடுகு வேலிகளாலேயே அடைத்து இருக்கும்.வீட்டின் பின் புறத்தில் நடக்கின்ற அத்தனை விடயங்களையும் ஜன்னல்கள் வழியாகப் பார்கலாம். பக்கத்து வீட்டுக் காரரின் எல்லை வேலியிலிருந்து ஜன்னல் கம்பியில் கயிறு எப்பொழுதும் கட்டப் பட்டிருக்கும். இந்த கொடியில் தான் எங்கள் வீட்டாரின் கையால் துவைக்கும் உடைகள் காயப் போடப்படும்.நேற்றுப் பிற்பகல் தோய்த்துப் போட்ட அக்காவின் உடைகள் இன்னும் காய்ந்து கொண்டிருந்தது.



அப்பா காலையில் தொழிலுக்குப் போய் வந்த பின் மரக்கோல்,பறி,அத்தாங்கு,கடிப்பு எல்லாவற்றையும் இந்த கொடிக்கு கீழேயே வைப்பார்.கடிப்பை மட்டும் காயப்போடுவார். காயப் போடப்பட்ட கடிப்பு வலை சில சமயங்களில் ஒழுங்காகத் துப்பரவு செய்யப் படவில்லை என்றால் கடிப்பு வலைக்குள் காணப்படும் சாதளைகள்,தேரை மீன்களைக் காகங்கள் போட்டி போட்டுக்கொண்டுக் கொத்தி எடுத்து சாப்பிட்டு விட்டு கா..! கா..! என்று கத்திகொண்டே இருக்கும். சில வேளைகளில் இவை எல்லாம் எனக்கு மிகவும் எரிச்சலை ஏற்படுத்தும். ஒரு வகையில் படிப்பதற்கு இவை இடையூறை விளைவிப்பதாக உணரும் போது அவற்றை சூ.. சூ..! என்று கலைத்தால் அவை எங்கட தங்கச்சியயைப் போல் அனைத்துமே காது கேட்காதது போல நின்று சாப்பிட்டுக்கொண்டே நிற்கும். ஒருக்கா அல்லது இரண்டு தடவைகள் நான் கத்திப்போட்டு அவற்றைக் கையை விட்டு விடுவேன். அப்பாவின் கால் சத்தம் கேட்டது. அப்பா இவ்வளவு நேரத்தோடு வருவது வழக்கமில்லை. கடிப்பை அப்படியே வேலியோடு சாத்தி வைத்தார். வழமையாகக் காயப் போடுவார் ஆனால் இன்று அப்படிச் செய்யவில்லை. கடிப்பில் ஈரமில்லை.. எல்லாம் வழமைக்கு மாறாகவே இருந்தது. ஒரு வித அச்சம் மனதில் பரவியது.

விறாந்தையிலிருந்து அப்பா பதற்றமாகக் கதைத்துக் கொண்டிருப்பது என் காதில் அரைகுறையாக விழுந்தது. என்ன நடந்திருக்கும்? அறிய ஆர்வம் மேல் எழுந்தது.வெளியே விறாந்தைக்கு வந்தேன்.அக்கா, தங்கச்சி,அம்மா,அப்பா எல்லோரும் கண் கலங்கியபடி அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தார்கள்.
“அம்மா என்ன நடந்தது..?”
“நேற்று பரவைக் கடலில பாஞ்ச புது வலையை யாரோ இரவோடு இரவாக களவெடுத்துக் கொண்டு போயீற்றாங்கலாம்” அம்மா அழுது கொண்டே சொன்னார். எனக்கு கண்ணீரோடு கவலை தொடங்கியது.

## கரவையூரான்



அவுஸ்திரேலியாவை தேடிவந்த சிங்களத்தின் அச்சுறுத்தல்! இனவழிப்பு பற்றி **Hugh McDermott MP** உரை!!

இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற மிகக்கொடிய போரின் அழிவுகளின் தாக்கம் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் வாழும் என்னையும் எனது குடும்பத்தையும் பாதிக்கும் என நான் நினைத்திருக்கவில்லை என அவுஸ்திரேலியாவின் நியுசவுத்வேல்ஸ் மாநில அவை உறுப்பினர் கியு மக்டேமைற் இன்று புதன்கிழமை மாநில அவையில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

அவரது உரையின் முக்கிய விடயங்கள் வருமாறு:

கடந்த மே 18 அன்று முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்தேறிய கொடிய இனவழிப்பின் நினைவு நாள் தொடர்பான எனது உரை தொடர்பாக கடுமையான மிகவும் அதிர்ச்சியாக இருக்ககூடிய செய்தி என்னவென்றால், இந்த கொடுமையான அச்சுறுத்தல்கள் அனைத்தும் தற்போதைய கோத்தபாய அரசாங்கத்தின் திட்டமிட்ட ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது என்பதுதான். நான் மட்டுமல்ல சக நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதையொத்த அச்சுறுத்தல்களை எதிர்கொண்டார்கள்.

உண்மையில் அங்கு என்ன நடந்தது?

சிறிலங்கா சுதந்திரமடைந்த நாளிலிருந்து, எண்ணிக்கையில் சிறுபான்மையான தமிழர்களை ஒடுக்கும் நோக்குடன் உடல்ரீதியாக பொருளாதார ரீதியாக அரசியல் ரீதியாக பாதிப்புக்களை ஏற்படுத்தினார்கள். தமிழர்களுக்கு எதிரான சட்டவாக்கங்களை மேற்கொண்டு, சிறிலங்கா அரசும் சிறிலங்கா அரச படைகளும் இணைந்து தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரங்களை ஏற்படுத்தினார்கள்.

தமிழ் மக்களின் 1950 களில் 1960 களில் 1970 களில் நடைபெற்ற சமாதான வழிமுறையான எதிர்ப்பு ஊர்வலங்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொண்டார்கள். அதன் உச்சமாக 1983 இல் கறுப்பு யூலை பெரும் இனவழிப்பு நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக 26 ஆண்டுகள் அங்கு உள்நாட்டுப்போர் நிலைமை ஏற்பட்டது. இந்தப்போரில் சிறிலங்கா அரசபடைகளால், கொலைகள் பாலியல் வன்புணர்வுகள் கடத்தப்படுதல் கண்மூடித்தனமாக எறிகணைத்தாக்குதல்களை மேற்கொள்ளல் என சிறுவர்கள் பெண்கள் என அப்பாவி தமிழ் மக்கள் மீது அழிவை மேற்கொண்டார்கள். இதன் விளைவாக 150000 தொடக்கம் 200000 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். அதில் குறைந்தது 70000 வரையான தமிழர்கள் மார்ச் 2009 தொடக்கம் மே 2009 வரையான காலப்பகுதியில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். ஏறத்தாழ 300000 தமிழர்களை பாதுகாப்பு வலயங்களுக்குள் செல்லுமாறு அறிவித்துவிட்டு அங்கு எறிகணைகளை ஏவித்தாக்குதல் செய்திருக்கின்றார்கள்.

மார்ச் 2011 இல் நம்பத்தகுந்த குற்றசாட்டுகள் அடிப்படையில் போர்க்குற்றங்களும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களும் நடைபெற்றதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டிருந்தது. அதனைத்தொடர்ந்த பொறிமுறைகளில் இதுபற்றிய நீதிப்பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவது பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனாலும் அதனை ஏற்படுத்துவதில் சிறிலங்கா அரசு தனது வாக்குறுதியில் இருந்து பின்வாங்கிவிட்டது. இந்த நிலையில் தான் எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக 137000 பேர் கையெழுத்திட்டு ஆதரவை தெரிவித்தற்கு நன்றி தெரிவிக்கின்றேன். தமிழ்ச் சமூகத்தின் இனவழிப்பு நடைபெற்றது என்பதை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக அவர்களுடன் நானும் இணைந்து நிற்கின்றேன்.

இந்த இனவழிப்பை செய்தவர்களுக்கு சொல்கின்றேன். நீதி உங்களை தேடி வந்துகொண்டிருக்கின்றது. நீங்கள் ஒருபோதும் அதிலிருந்து தப்பமுடியாது.

- என அவர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்


## Guruparan Kumaravadivel

இந்தப் பதிவின் கீழ் வரும் காணொளியை பாருங்கள். காணாமல் போனோர் விடயத்தில் சுமந்திரன் சேரை காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் உறவுகள் பொறுப்புக் கூற சொல்லுவது தவறு என்றும், சித்தர் போன்றோரை பொறுப்பு கூற சொல்லி கேட்கலாம் என்றும் காணாமல் போனோர் விடயத்தில் சித்தர் பொறுப்புக் கூற வேண்டிய காரணம் அவர் நீண்ட காலம் அரசியலில் இருக்கின்றமையால் என்றும் அது தமிழரசுக் கட்சி ஆரம்ப கால போராட்டங்களில் ஆரம்பிக்கின்றது எனக் கூறுகிறார் அண்ணன் கஜதீபன். சித்தரை புளொட் தலைவர் என்று சொல்வதற்கு கூட முடியாமல், புளொட்டின் கடத்தலால் பலர் காணாமல் ஆக்கப்பட்டனர் ஆகவே அவர் பொறுப்பு சொல்ல வேண்டும் என சொல்லும் துணிவு இல்லாத கஜதீபன் அண்ணா இதிலை சித்தார்த்தனை இழுக்காமலே விட்டிருக்கலாம். தன் தலைவனை புகழ்ந்து பேச அனைத்து தருணங்களை யும் கஜதீபன் அண்ணா பாவிக்க ஆசைப்படுவது விளங்குகின்றது. ஆனால் இப்படி வரலாற்று வெள்ளை யடிப்பு எல்லாம் நிச்சயம் தேவை தானா. சிரித்துக் கொண்டு தாம் தர்மாவாதிகள் போன்று கதைக்கும் போது எரிச்சல் தான் வருகின்றது. ஆசனம் தந்ததற்காக, ஆசனதுக்காக இப்படியெல்லாம் நடிக்க வேண்டுமா?
சித்தர் வெல்வார் என்று ஊகிக்கலாம். அவருக்கு விழும் விருப்பு வாக்குகள் தனக்கும் விழும், ஐந்தாவது ஆசனம் என்று ஒன்று இருந்தால் ஒரு வாய்ப்பு இருக்கும் என்று நம்பி இருக்கிறார் அண்ணன் கஜதீபன். இது தான் சனநாயகம். இவர்கள் எல்லாம் எங்கள் பிரதிநிதிகள். கொடுமை.

காணொளி :
**https://m.facebook.com/story.php?story_fbid=3132671730111656&id=100001065781656**


---

யாரால் என்ன எப்போது எவ்வாறு எந்த தர்மம் கவ்வப்பட்டது? ஒட்டுக் குழுவாக அரச படைகளோடு சேர்ந்து 2009 வரை தம்மால் கவ்வப்பட்ட உயிர்களை சொல்கிறாரோ?
தயவு செய்து உங்கள் பிரச்சார கோஷங்களை பார்த்து தேர்வு செய்யுங்கள். கடுப்பை கிளப்ப வேண்டாம்.



# இலங்கையின் கேலிக் கூத்துகள் ஒரு பார்வை

நன்றி கூகிள்.கொம்




**எம் இனிய வாசக நேயர்களே!**
இணைய மூலம் உங்களை நாடிவரும் “தீபம்” இணையவார இதழ் குறித்த உங்கள் மனப் பதிவுகளை, கருத்ததிர்வுகளை எம்முடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறோம்..
தமிழ் ஊடகப் பரப்பில் சுயாதீனமானதும்,தனித்துவமானது மானதுமான இலக்கில் மக்கள் தேடலைத் தொடர, நீங்களும் எம்முடன் இணைந்து செயற்பட விரும்புகிறோம்.
தீபம் பற்றிய ஆழமானதும், அர்த்தமுள்ளதுமான தங்கள் எண்ணங்களுடன் எம்முடன் தொடர்ந்து இணைந்திருங்கள்..

உங்கள் எண்ணங்களை எழுதி எமது மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது வட்ஸ்அப் இலக்கத்துக்கோ அனுப்பி வைக்கலாம்.

-தீபம்-

## வாக்களான் வாக்கே வாக்காளனைக் காக்கும்

வேட்பாளரின் வாக்குறுதிகள் உங்களைக் காக்காது..
அரசியல்வாதிகள் தடம்மாறுகிறார்கள்
ஆனால்..! வாக்காளர்கள் தடுமாறக் கூடாது.!

ஜனநாயகம் என்பது வாக்காளனின் சுதந்திரத்தில் தங்கியுள்ளது.!

சுதந்திரம் என்பது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் தங்கியுள்ளது..!

அதிகாரத்தைப் பிறரிடம் கையளிக்க முன்
அவர் தகுதி பற்றியும், அவர் உண்மைத் தன்மை பற்றியும் சற்றுச் சிந்தியுங்கள்..!

சரியானவருக்கு உங்கள் வாக்கைக் கொடுப்பதன் மூலம் போலிகளைப் புறந்தள்ளிவிட்டு, ஆரோக்கியமானதொரு சமூகத்தைக் கட்டி எழுப்பத் துணை நிற்கத் திடசங்கற்பம் கொள்வோமாக!








வார இதழ் தீபம் இணையப் பதிப்பு

## வாசகர்களுக்கு... ஒரு வேண்டுகோள்

தீபம் இணைய இதழாக வரத் தொடங்கிப் பல வாரங்களாகின்றன. அதுவும் இலவசமாக உங் களைத் தேடி வருகிறது. எம்முடன் தொடர்பில் இல்லாதவர்கள் இதனைப் பெற விரும்பினால், தயவு செய்து deepamweekly20@gmail.com எனும் எமது மின்னஞ்சல் முகவரிக்கு வேண்டுகோளை அனுப்பி அல்லது Whatsapp / IMO இலக்கமான

imo Whatsapp +94715177 847

+94760288 853 Viber

தற்போது தமிழன் வழிகாட்டி இணையத்தளத்திலும் www.tamilanguide.com

உடன் இணைந்து பிரதியைப் பெற்றுக் கொள்ள லாம். அது மட்டுமல்லாது நீங்கள் எங்களுக்குச் செய்யும் கைமாறாக உங்களுக்கு வரும் இதழை தரவிறக்கம் செய்து உங்கள் குழுவிலுள்ள பிற ரோடும் பகிர்ந்து கொண்டால் இந்த இதழை மேலும் விரிவுபடுத்தி, மிகவும் பயனுள்ளதாக அமைக்க வாய்ப்பாக இருக்கும் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இவ் இணைய வார இதழ் : இல. 151, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள நோர்சி மீடியா பணிமனையில் தயாராகி 21.06.2020 அன்று வெளியிடப்பட்டது.